CENTAMIL ILAKKANAM

FORM I, II & III

V. NARASIMHAN & C. RAMASAMY

2
E

செந்தமிழ் இலக்கணம்

முதற்படிவம்—சிறப்புப்பகுதி

வித்துவான், V. நரசிம்மன், M. A.,

வித்துவான், C. இராமசாமி

தமிழ் ஆசிரியர்–கழக உயர்நிலைப்பள்ளி, வத்தலகுண்டு.

★

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம்

பதிப்புரிமை]

[விலை 0—6—0

முதற் பதிப்பு—1954
இரண்டாம் பதிப்பு—1955

Approved by the Text Book Committee, Madras
for class use
Vide page 26 dated 4—5—55

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

CONNEMARA PUBLIC LIBRARY
25 NOV 1957
MADRAS

முன்னுரை

செந்தமிழ் இலக்கணம் என்னும் இந்நூல், முதன் மூன்று படிவச் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்க்கு உரியதாக 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை (syllabus) அடியொற்றி அம்மாணவர்கட்கு நன்கு பயன்படும் வகையில் இயற்றப் பட்டுள்ளது.

உதாரணங்களால் விதியைக் கற்பிப்பதாகிய அநுமான முறை (inductive method) இந்நூலில் கையாளப்படுகின்றது. மாணவர் விருப்பத்தோடு இலக்கணங் கற்க இது ஏதுவாகும். இதில் கொடுக்கப் பட்டுள்ள உதாரணங்கள் எளிமையும் விளக்கமும் உடையவை. ஆங்காங்குப் புதிய முறையில் போதிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இறுதியிலுள்ள தேர்வு வினாக்கள் கற்றவற்றைக் கருத்திற்குக் கொணர்ந்து பயில பயன்படும்.

கல்வித் துறை போகியார் இதனை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

ஆக்கியோர்கள்.

பொருளடக்கம்

முதற்படிவம் — சிறப்புப்பகுதி

பொருள்		பக்கம்
I. எழுத்து:		
(1) ஒலி எழுத்து, வரி எழுத்து	...	1
(2) எழுத்து வகைகள்	...	2
(3) சில எழுத்துக்களின் ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும்	...	6
II. சொல் ஆக்கம்:		
(1) பகுதி — வினைப்பகுதி	...	13
(2) பெயர்ப்பகுதி	...	15
III. தொடர் ஆக்கம்:		
(1) தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலந்து வருதல்	...	16
(2) வழூஉச் சொல்லும் திருத்தமும்	...	19
V. சொல்:		
(1) பெயர்ச்சொல்	...	20
(2) வினைச்சொல்	...	22
(3) எண்ணுப் பெயர்கள்	...	24
(4) அடை மொழிகள்	...	26
(5) சொற்கள் இடத்திற்கேற்பப் பொருள் மாறுபட்டு வருதல்	...	28
(6) ஒரு பொருட் பல சொற்கள்—நுட்பமான பொருள் வேறுபாடுகள்	...	29

V. புணர்ச்சி: இன்றியமையாத சில விதிகள்

(1) இயல்பு புணர்ச்சி — விகாரப் புணர்ச்சி ... 31

(2) தனிக்குறிலைச் சாராத மெய்ம்முன் உயிர் புணர்தல்... 33

(3) தனிக்குறிலைச் சார்ந்த மெய்யின்முன் உயிர் புணர்தல் ... 33

(4) வல்லெழுத்து மிகும் இடங்கள் ... 34

VI. நிறுத்தற் குறிகள்:

பயிற்சி வினாக்கள் ... 38

செந்தமிழ் இலக்கணம்

முதற் படிவம் — சிறப்புப் பகுதி

I. எழுத்து

1. ஒலி எழுத்து, வரி எழுத்து

ஒலி எழுத்து: ஒலி பல வகைகளில் உண்டாகிறது. உதாரணமாக மணி அடிக்கும்போது ஒலி உண்டாகிறது; ஆடு கத்தும்போது ஒலி உண்டாகிறது; மழை பெய்யும்போது ஒலி உண்டாகிறது. இந்த ஒலிகளுக்கெல்லாம் பொருள் இல்லை. ஆனால் மனிதன் பேசும்போது உண்டாகும் ஒலிக்கோ பொருள் இருக்கிறது. அதாவது ஒரு மனிதன் ஒரு கருத்தை ஒருவகை ஒலியால் வெளியிடுகிறான். அந்த ஒலியை மற்ற மனிதர்கள் கேட்டதும் அவன் கருத்தை அவர்கள் அறிந்து கொள்ளுகிறார்கள். மனிதன் இப்படிச் செய்யும் ஒலியானது சொல் எனப்படுகிறது.

சொற்கள் பெரும்பாலும் பல ஒலிகளால் ஆனவை. உதாரணமாக ***மண்*** என்று சொல்லும்போது அதில் ***ம, ண்*** என்று இரண்டு ஒலிகள் ஏற்படுகின்றன; ***கடல்*** என்று சொல்லும்போது ***க, ட, ல்*** என்று மூன்று ஒலிகள் ஏற்படுகின்றன. இந்த ஒலி ஒவ்வொன்றும் மனிதன் வாயிலிருந்து எழுகிறது. ஆகையால் ***எழுத்து*** எனப்படுகிறது.

இவ்விதமாக சொல் உண்டாவதற்குக் காரணமாக உள்ள ஒலியே எழுத்து ஆகும். மனிதனுடைய பேச்சில் தோன்றும் எழுத்து 'ஒலி எழுத்து' எனப்படும்.

வரி எழுத்து: மனிதன் தன் கருத்தைக் காகிதம், பலகை முதலியவற்றில் எழுதியும் பிறருக்குத் தெரிவிப்பது உண்டு. இப்படி எழுதும்போது கோடு அல்லது வரி மூலமாக ஒலி எழுத்து குறிக்கப்படுகிறது; அதாவது எழுதப்படுகிறது. இப்படி எழுதப்படுவதும் எழுத்து ஆகும். இது 'வரி எழுத்து' எனப்படும்.

எழுத்து பேசும்போது "ஒலிவடிவம்" பெறுகிறது; எழுதும்போது "வரிவடிவம்" பெறுகிறது.

---

2. எழுத்து வகைகள்

1. உயிரெழுத்து

அ, ஆ, இ, ஈ: இந்த எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். இவை வேறோர் எழுத்தின் உதவி இல்லாமல், தாமே உச்சரிக்கக் கூடியவையாக இருக்கின்றன என்று தெரிகிறது அல்லவா? உயிர் எப்படி வேறொன்றின் உதவி இல்லாமல் இயங்க வல்லதாக இருக்கிறதோ, அதேபோல இந்த எழுத்துக்களும் தாமே இயங்க வல்லவைகளாக இருக்கின்றன. ஆதலால் இவைபோன்ற எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள் எனப்படும்.

உயிரெழுத்தாவது உயிர்போலத் தானே இயங்க வல்ல எழுத்தாம். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் 12 எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் ஆகும்.

2. மெய்யெழுத்து

க், ங், ச், ஞ்: இந்த எழுத்துக்களை உச்சரித்துப் பாருங்கள். இவை இக், இங், இச், இஞ் என முறையே உச்சரிக்கப்படுகின்றன அல்லவா? அதாவது இவற்றை உச்சரிக்கும்போது இ என்னும் உயிரெழுத்தைச் சேர்த்து உச்சரிக்க வேண்டியிருக்கிறது. உயிரெழுத்தின் உதவி இல்லாமல் இந்த எழுத்துக்களை உச்சரிக்க முடியாது. நமது உடம்பு (மெய்) எப்படி உயிரின் உதவி இல்லாமல் இயங்க முடியாதோ, அப்படியே இவையும் உயிரெழுத்தின் உதவி இல்லாமல் இயங்க முடியாது. இப்படி இவை மெய் (உடம்பு) போல இருப்பதனால் இவை மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

மெய்போல, உயிரின் உதவியின்றி இயங்க முடியாத எழுத்து மெய்யெழுத்து ஆகும். க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், என்னும் 18 எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களாம்.

3. உயிர்மெய் எழுத்து

கு, சி, தா, பை: இந்த எழுத்துக்களைக் கவனித்துப் பாருங்கள். இவற்றுள்,

கு என்பது க் என்னும் மெய்யும் உ என்னும் உயிரும் சேர்ந்து ஆனது; அதாவது க்+உ=கு.
இப்படியே, ச் + இ = சி
த் + ஆ = தா
ப் + ஐ = பை

இப்படி மெய் முன்னும் உயிர் பின்னுமாக ஒன்று கூடி உண்டாகும் எழுத்து உயிர்மெய் எழுத்து எனப் படும்.

உயிரும் மெய்யும் சேர்ந்து உண்டாகும் எழுத்து உயிர்மெய் எழுத்து ஆகும். உயிர் மெய் எழுத்தில் உயிர் ஒலி பின்னும், மெய் ஒலி முன்னுமாக அமைந்திருக்கும். 12 உயிர்களும் 18 மெய்களும் இவ்வாறு சேர்ந்து மொத்தம் 12×18=216 உயிர்மெய் எழுத்துக்கள் உண் டாகும்.

குறிப்பு: க, கா, கி, கீ முதலியனவாக உள்ள உயிர்மெய் எழுத்துக்களைத் தமிழ் நெடுங்கணக்கில் கண்டு கொள்க.

4. ஆய்த எழுத்து

ஃ இவ்விதமாக மூன்று புள்ளியிட்டு எழுதப்படும் எழுத்து ஆய்த எழுத்து எனப்படும். இதன் உச்சரிப்பு மிகவும் நுணுக்கமானது. இதை உச்ச ரித்துத் தெரிந்துகொள்ளுங்கள். இது சொல்லின் இடையிலே வரும்.

உதாரணம்: அஃது, எஃது, அஃறிணை.

சொற்களின் இடையிலேயே வருவதாய், நுணுகிய ஓசையை உடைய "ஃ" என்னும் எழுத்து ஆய்த எழுத்தாம்.

மேற்கூறியவைகளிலிருந்து தமிழ் எழுத்துக்கள், உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும் என்று அறியலாம்.

உயிர் எழுத்துக்கள்	12
மெய் எழுத்துக்கள்	18
உயிர்மெய் எழுத்துக்கள்	216
ஆய்த எழுத்து	1
ஆக மொத்தம் தமிழ் எழுத்துக்கள்	247 ஆகும்

பயிற்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் கண்ட சொற்களிலுள்ள எழுத்துக்கள் முறையே இன்ன வகையைச் சார்ந்தவை எனப் பின்கண்டவாறு அட்டவணையிட்டுக் குறித்துக் காட்டுக.

1. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
2. ஐயம் புகினும் செய்வன செய்.
3. திணை உயர்திணை அஃறிணை என இரு வகைப்படும்.

உயிர் எழுத்து	மெய் எழுத்து	உயிர்மெய் எழுத்து	ஆய்த எழுத்து

3. சில எழுத்துக்களின் ஒலி வேறுபாடும் பொருள் வேறுபாடும்

1. ர, ற வேறுபாடு

ர ற இந்த இரண்டு எழுத்துக்களும் ஒரே உச்சரிப்பை உடையனபோலக் காணப்படும். ஆனால் உண்மையில் இவை வேறு வேறு உச்சரிப்பை உடையவை. இவற்றின் பிறப்பைக் கொண்டு இவற்றின் உச்சரிப்பை நன்ருக அறிந்து உச்சரிக்க வேண்டும்.



1. *ர* - மேல்வாயை நாவின் நுனி தடவுவதால் இந்த எழுத்துப் பிறக்கும். *மரம், விரல்* என்பன போன்ற சொற்களில் உள்ள இந்த எழுத்தை மேற்கண்டவாறு உச்சரிக்கவும்.

2. *ற* - மேல்வாயை நாவினது நுனி அதிகமாகப் பொருந்துவதஞல் இந்த எழுத்துப் பிறக்கும். *சிறகு, பிறப்பு* என்பன போன்ற சொற்களில் உள்ள இந்த எழுத்தை மேற்கண்டவாறு உச்சரிக்கவும்.

பிறப்பிலும் உச்சரிப்பிலும் இந்த எழுத்துக்கள் வேறுபடுவது போலவே, இவை பொருந்தி வரும் சொற்களும் பொருளில் வேறுபடும். உதாரணமாக இங்கே சில சொற்களைக் குறிப்போம்.

ர	—	ற
1.	அரம் - அராவுதற்குரிய கருவி	— அறம் - தருமம்
2.	அரி - திருமால், நறுக்கு	— அறி - தெரிந்துகொள்
3.	அரை - சரிபாதி	— அறை - வீட்டின் ஒரு பகுதி
4.	இரு - உட்கார்	— இறு - வடிகட்டு
5.	இரை - உணவு	— இறை - வரி, தலைமை
6.	உரு - வடிவம்	— உறு - மிகுந்த, பெறு
7.	எரி - நெருப்பு	— எறி - வீசு
8.	ஏரி - நீர்நிலை	— ஏறி - மேலே ஏறி
9.	கரி - யானை	— கறி - பதார்த்தம்
10.	கூரை - வீட்டின் உறுப்பு	— கூறை - ஆடை
11.	திரை - அலை	— திறை - கப்பம்
12.	பரி - குதிரை	— பறி - மீன்கூடை
13.	மரம் - ஒரு தாவரப் பொருள்	— மறம் - வீரம்
14.	விரல் - ஓர் உறுப்பு	— விறல் - வலிமை

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:

1. அரம் என்றால் தருமம் என்பது பொருள்.
2. கறி என்பது யானையின் பெயர்.
3. கண்ணன் கூறை வீட்டில் வசிக்கிறான்.
4. கடலில் திறை எழும்பி எழும்பி விழுகிறது.
5. அவனுடைய பறி வேகமாய் ஓடிற்று.
6. கோழி குப்பையைக் கீறி இறை தின்றது.
7. முருகன் ஏறியின் கரைமேல் ஏரி வந்தான்.
8. மரத்தின்மேல் ஏரித் தேங்காயைப் புரி

2. ந, ன, ண

மேற்கண்ட மூன்று எழுத்துக்களில் ந, ன என்னும் இரண்டும் உச்சரிப்பில் ஒன்றுபோலக் காணப்படும். ஆயினும் அவற்றுள் பேதம் உண்டு. ண என்பது முன் இரண்டினும் உச்சரிப்பில் வேறுபட்டது. ஆயினும் சிலர் பிழைபட உச்சரிக்கிறார்கள். இவ்வெழுத்துக்கள் பொருந்தி வரும் சொற்களும் பொருளில் வேறுபடும். இவற்றின் உச்சரிப்பையும் பொருள் வேறுபாட்டையும் பின்னர்க் காண்க.



1. ந - மேல்வாய்ப் பல்லின் அடிப்புறத்தை நாவின் நுனி பொருந்துவதனால் இந்த எழுத்துப் பிறக்கும். இது தகரத்தை அடுத்து வரும் ஆகையால் தந்நகரம் எனப்படும். மேலும் இது சொல்லின் இறுதியில் பெரும்பாலும் வராது; சொல்லுக்கு முதலில் வரும்.

2. ன - மேல் வாயை நாவின் நுனி மிகப் பொருந்துவதனால் இந்த எழுத்துப் பிறக்கும். இது றகரத்தை அடுத்து வரும் ஆகையால் றன்னகரம் எனப்படும். இது சொல்லுக்கு முதலில் வராது; சொல்லின் கடைசியில் வரும்.

3. ண-மேல் வாயின் நுனியை நாவின் நுனி பொருந்துவதால் இந்த எழுத்துப் பிறக்கும். இது டகரத்தை அடுத்து வருவதால் டண்ணகரம் எனப்படும். இதுவும் சொல்லுக்கு முதலில் வராது; ஈற்றில் வரும்.

பொருள் வேறுபாடு

	ந	ன		ண
1.	நான் - பேசுகிறவன்		–	நாண் - கயிறு
2.	நானம் - கஸ்தூரி		–	நாணம் - வெட்கம்
3.	நனி - மிகவும்		–	நணி - நெருங்கி

குறிப்பு: மேற்கண்ட சொற்களை னாந், னாண், னாநம், னாணம், னநி, னணி என்று எழுதுதல் கூடாது.

4. ஆனை - யானை — ஆணை - கட்டளை
5. ஊன் - மாமிசம் — ஊண் - உணவு
6. மனை - வீடு — மணை - ஆசனம்
7. பனி - குளிர்ச்சி — பணி - வணங்கு
8. பனை - ஒரு மரம் — பணை - மூங்கில்
9. தினை - ஒரு தானியம் — திணை - வகுப்பு, குலம்
10. கனம் - பளு — கணம் - கூட்டம்

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:

1. நாண் அவனோடு பேசினேந்.
2. நானம் உள்ளவந் இப்படிச் செய்ய மாட்டாண்.
3. பணை மரம் மட்டைகளை உடையது.
4. திணை என்பது தானிய வகைகளுள் ஒன்று.
5. ஆனை வரும் பிண்ணே; மணி ஓசை வரும் முண்ணே.
6. கோவிலுக்குச் சென்று கடவுளைப் பனிந்தாந்.

3. ல, ழ, ள

இந்த மூன்று எழுத்துக்களும் உச்சரிப்பில் வேறுபடுமாயினும், பலர் இவற்றின் உச்சரிப்பைச் சரிவர அறியாமல் பிழைபட உச்சரிக்கிறார்கள். மேலும் இவை பொருந்தி வரும் சொற்களும் பொருளில் வேறுபடும்.

இவற்றின் உச்சரிப்பு வேறுபாடுகளையும், இவை சொற்களில் பொருந்தி வருங்கால் அச்சொற்கள் பொருள் வேறுபட வருவதையும் அடியிற் காண்க.

1. ல - மேல் வாய்ப்பல்லின் அடியை நாவின் விளிம்பு தடித்துப் பொருந்துவதால் இந்த எழுத்துப் பிறக்கும்.



2. ழ - மேல் வாயை, நாவின் நுனி தடவுவதால் இந்த எழுத்துப் பிறக்கும்.

3. ள - மேல் வாயை, நாவின் விளிம்பு தடித்துத் தடவ இந்த எழுத்துப் பிறக்கும்.

பொருள் வேறுபாடு

	ல	ழ	ள
1.	அலை-கடல் அலை-	அழை-கூப்பிடு-	அளை-புற்று
2.	கலை-ஆடை	- கழை-மூங்கில் -	களை-நீக்கு
3.	தலை-ஓர் உறுப்பு -	தழை-இலை	- தளை-கட்டு
4.	விலை-மதிப்பு	- விழை-விரும்பு	- விளை-உண்டாக்கு
5.	கிலி-அச்சம்	- கிழி-துண்டு	-கிளி-ஒரு பறவை
6.	வலி-நோய்	- வழி-பாதை	-வளி-காற்று
7.	உலை-அடுப்பு -	உழை-வேலை செய்	-உளை-சேறு

பின் வரும் வாக்கியங்களிலுள்ள பிழைகளைத் திருத்துக:

1. கரன் வழித்தது என்று முருகன் அழுதான்.
2. உளையில் பானை ஏற்றிச் சோறு சமைத்தான்.
3. தஞ்சைக்குச் செல்லும் வலி நீண்டது.
4. கிலி ஒரு அளகான பறவை.
5. தளை வழிக்கு மருந்து கொடு.
6. வயலில் கலை பிடுங்கினான்.

II. சொல் ஆக்கம்

வா, போ, கை, பை,—இங்கே காணப்படும் நான்கு எழுத்துக்களும் தனித்தனி ஒரு பொருளைத் தெரிவிக்கின்றன. இது எழுத்து தனித்து வந்து பொருள் உணர்த்தியது.

நிலம்—இது மூன்று எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து வந்து பொருளை உணர்த்தின.

பருந்து—இங்கு நான்கு எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து வந்து பொருளை உணர்த்தின.

ஆகையால் நிலம், பருந்து என்பன, பல எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து வந்து பொருள் உணர்த்தியவை ஆகும். மேற்கண்டவாறு, எழுத்து தனித்தாவது, பல ஒன்று சேர்ந்தாவது பொருள் தந்தால் அது சொல் எனப்படும்.

பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனச் சொல் நான்கு வகைப்படும்.

1. பகுதி—வினைப்பகுதி

நடந்தேன்—இது 'நான் நடந்தேன்' எனப் பொருள்படும்.

நடந்தாய்—இது 'நீ நடந்தாய்' எனப் பொருள்படும்.

நடந்தான்—இது 'அவன் நடந்தான்' எனப் பொருள்படும். இவற்றுள் முதலில் உள்ள நட என்பதே நடத்தலாகிய தொழிலைக் குறிப்பதை அறிக. இவ்வாறே.

வந்தான் என்பதில் *வா* என்பது தொழிலைக் குறிக்கும்.

போகிறாய் என்பதில் *போ* என்பது தொழிலைக் குறிக்கும்.

வினைச் சொற்களில் முதலில் மேற்கண்டவாறு தொழிலை உணர்த்தி நிற்பது *வினைப்பகுதி* எனப் படும். *பகுதி* என்பது முதலில் நிற்பது. ஆதலால் *முதனிலை* என்றும் சொல்லப்படும். சில வினைச் சொற்களிலுள்ள பகுதிகளை அடியிற் காண்க:

(உ-ம்)	*வினைச்சொல்*		*பகுதி*
(1)	பார்க்கிறான்	—	பார்
(2)	உண்பாய்	—	உண்
(3)	இருக்கின்றேன்	—	இரு
(4)	தடுத்தான்	—	தடு
(5)	எடுக்கிறாய்	—	எடு
(6)	கொடுப்பான்	—	கொடு

இந்த வினைச்சொற்களில் பகுதி, உருவம் மாறு படாமல் இருக்கின்றன. சில வினைச்சொற்களில் பகுதி உருவம் மாறி வரும்.

(உ-ம்)	*வினைச்சொல்*		*பகுதி*
(1)	வருகிறேன்	—	வா
(2)	தருவான்	—	தா
(3)	கண்டாள்	—	காண்
(4)	விட்டான்	—	விடு
(5)	தொட்டான்	—	தொடு

பின்கண்ட வினைச் சொற்களில் உள்ள பகுதிகளைத் தனியே எடுத்து எழுது:

காண்பான், உட்கார்ந்தான், நின்றேன், கற்றாய், பெற்றீர், நட்டான், பாடினாள், தேடினாள், பேசினாய், புகழ்ந்தான்.

2. பெயர்ப்பகுதி

வினைச் சொற்களில் பகுதிகள் இருப்பது போலவே பெயர்ச் சொற்களிலும் பகுதிகள் இருப்பது உண்டு. கீழே சில பெயர்ச் சொற்களில் உள்ள பகுதிகளை எடுத்துக் காட்டியிருப்பது காண்க.

	பெயர்ச்சொல்		பகுதி
(1)	கூனன்	—	கூன்
(2)	அரசன்	—	அரசு
(3)	வலைஞன்	—	வலை
(4)	அறிஞன்	—	அறிவு
(5)	மனைவி	—	மனை
(6)	வில்லி	—	வில்
(7)	இல்லான்	—	இல்
(8)	உழவன்	—	உழவு
(9)	நண்பன்	—	நள்
(10)	வம்பன்	—	வம்பு

பின்கண்ட பெயர்ச் சொற்களிலுள்ள பகுதிகளைத் தனியே எடுத்து எழுதுக:

அரசி, கொலைஞன், மனைவி, திருடன், பகைவன், பல்லன், தோளன், புலவன், அயலார், கறுப்பன்.

III. தொடர் ஆக்கம்

பொருள் பொருந்தி வருமாறு சொற்கள் தொடர்ந்து வருவது சொற்றொடர் எனப்படும்.

(உ-ம்) முருகன் கடைக்குச் சென்றான்.

மேலே கண்ட சொற்றொடரில் பொருள் முடிவு பெற்று இருக்கிறது. இவ்விதச் சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் அல்லது வாக்கியம் எனப்படும்.

சில சொற்றொடர்களில் பொருள் முற்றுப்பெற்று இரா. அவ்விதச் சொற்றொடர் எச்சச் சொற்றொடர் எனப்படும்.

(உ-ம்) இங்கு வந்த சிறுவன்
முருகன் பாடம் படித்துக்கொண்டு

குறிப்பு: பொருள் பொருந்தி வராமல் சொற்கள் பல தொடர்ந்து வந்தால் அவை சொற்றொடர் ஆகா.

(உ-ம்) கந்தன் பசு நடந்தேன் நில்.

1. தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கள் கலந்து வருதல்

நீண்ட காலமாகத் தமிழ் நாட்டாருடன் அந்நிய நாட்டார் பலர் வந்து பேசிப் பழகி உறவாடுகிறார்கள். அவர்களில் பலர் தமிழ் நாட்டில் நிலையாகத் தங்கி வாழ்ந்தும் வருகிறார்கள். அதனால் தமிழ் மொழியில்

வேற்று நாட்டாருடைய சொற்கள் வந்து கலந்துள்ளன. அவற்றை அறிந்துகொள்ளுதல் நல்லது. உதாரணமாக,

தம்பி, எது இந்தப்பக்கம் **விஜயம்** செய்தது? **அபூர்வமாய்** இருக்கிறதே! **கருடசேவைக்கு** வந்தாயோ?

இல்லை **ஸார்!** இங்கே ஒரு **ஆசாமி** பணம் தரவேண்டும்: **வசூல்** பண்ணுவதற்காக வந்தேன்,

ஐயா, **சலாம்!** கொஞ்சம் பேசலாமா?

ஓ! **பேஷாய்!** வாருங்கள் எல்லோரும் போய்க் **காப்பி** சாப்பிட்டுவிட்டு வருவோம்.

இந்த உரையாடலைக் கவனித்தால் இதில் பல மொழிச் சொற்கள் கலந்திருப்பது தெரியவரும். அவை தடித்த எழுத்துக்களில் உள்ளன; பாருங்கள். இச்சொற்களில்,

விஜயம், கருடசேவை, அபூர்வம் என்பவை **வடமொழி** அல்லது ஸமஸ்கிருதச் சொற்கள்.

ஸார், காப்பி என்பவை ஆங்கிலச் சொற்கள்.

சலாம், பேஷ் இவை இந்துஸ்தானிச் சொற்கள்.

ஆசாமி வசூல் இவை அரபிச் சொற்கள்.

தமிழில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்னும் ஒலிகளைக் கொண்ட சொற்கள் கிடையா. அதனால் இவ்வொலிகளைக் கொண்ட சொற்கள் வரின், அவை வேறு மொழிச்சொற்கள் என அறிந்துகொள்ளலாம். மற்றும்

தமிழில் வந்து வழங்கும் பிறமொழிச் சொற்கள் எல்லாவற்றையும் இங்கு எடுத்துக்கூற முடியாது. சிலவற்றை இங்கே கூறுவோம்.

பீச்சு, ஷாப்பு, கேட்டு, ரோடு — ஆங்கிலச் சொற்கள்.

கிராம்பு, அலமாரி, ஜன்னல், சாவி — போர்ச்சுக்கீசியச் சொற்கள்.

சுமார், ஜமீன், சிப்பாய், ரஸ்தா — பாரசீகச் சொற்கள்.

மாமூல், ஆசாமி, இலாகா, அனுமத்து — அராபியச் சொற்கள்.

அல்வா, ஆஜர், ருஜு, லட்டு — இந்துஸ்தானிச் சொற்கள்.

பயிற்சி

1. உங்களுக்குத் தெரிந்த பிறமொழிச் சொற்கள் சிலவற்றைக் கூறுங்கள்:

2. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்று மொழிச் சொற்களைத் தனியே எடுத்து எழுதுக.

(1) மாமூல் பிரகாரம் அவன் வந்து விசாரித்தான்.

(2) அலமாரியைத் திறந்து நோட்டு, புஸ்தகம் இவற்றை எடுத்து வா.

(3) பீச்சுக்குப்போய் ஜோராய் உலாவி வருவோமா?

(4) அந்தக் கேஸில் குற்றவாளி செய்த குற்றம் ருஜு ஆகவில்லை.

(5) ஹோட்டலுக்குப்போய் லட்டு, ஜிலேபி; ஹல்வா இவற்றை வாங்கிவா.

2. வழூஉச்சொல்லும் திருத்தமும்

பேச்சு வழக்கில் மக்கள் சொற்களைப் பலவாறு உருத் தெரியாமல் திரித்துச் சொல்கிறார்கள். அவை யெல்லாம் வழூஉச் சொற்களாம். வழூஉச் சொற்கள் என்றால் குற்றமுடைய சொற்கள் என்பது பொருள். நாம் பேசும்போது அப்படிப்பட்ட சொற்களைப் பேசாமல் திருத்தமாகப் பேசுவதே நல்லது. உதாரணமாக.

"மருதைக்கிப் போயி குருதை வாங்கிட்டு வந்தான்.

என்ன ஐயா, உங்கள் மகன் வாழைப்பழத்தை வாயப்பயம் என்று சொல்லுகிறான்.

அது அப்படித்தான் வயக்கங்க"

இந்தப் பேச்சைப் பாருங்கள்: இவற்றைத் திருத்தமாகச் சொல்ல வேண்டியது அவசியம் அல்லவா? இந்தக் கொச்சைப் பேச்சு தமிழ் நாட்டில் இடத்துக்கிடம் வேறுவேறாக இருக்கிறது. இவற்றை எடுத்துக்காட்டுதல் இயலாது.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களிலுள்ள வழுக்களைத் திருத்திச் சரியான முறையில் எழுதுக.

1. கொளந்தைக்கி இண்ணைக்கி ஒடம்பு நல்லா இல்லே.
2. மொவம் கயுவிக்கிறு பல்லத் தேச்சுக்கினு வந்து சேரு
3. சுவத்துமேல் கோடு கீச்சாதே.
4. ரொம்ப ரொம்ப ஜாமான் வாங்கிரிக்கியே! இன்னான்னா வாங்கினே?.
5. நாலு நாளா ஒசனே பண்றேன்; இன்னும் ஞாவகத்துக்கு வரலே.

IV. சொல்

1. பெயர்ச்சொல்

பொருட்பெயர் முதலிய ஆறுவகைப் பெயர்கள்

1. *வேலன், கமலம், குதிரை, கிளி, பலா* — இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளுக்குப் பெயராய் இருக்கின்றன அல்லவா? இவ்வாறு, பொருளுக்குப் பெயராய் வருவது *பொருட்பெயர்* எனப்படும்.

2. *ஊர், தோட்டம், வீடு, அறை, கடை* — இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடத்தின் பெயராம். இவ்வாறு இடத்திற்குப் பெயராய் வருவது *இடப் பெயர்* எனப்படும்.

3. *பிரபவ, வைகாசி, திங்கள், பரணி, பகல், மணி*—இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலத்தின் பெயராகும். இவ்வாறு, காலத்திற்குப் பெயராய் வருவது *காலப்பெயர்* எனப்படும்.

4. *வேர், காய், பூ, தலை, கை, கால், தூண்* — இவை ஒவ்வொன்றும் ஒரு பொருளின் பகுதியாகிய உறுப்பு அல்லது சினைக்குப் பெயராம், இவ்வாறு, சினைக்குப் பெயராய் வருவது *சினைப்பெயர்* எனப்படும்.

5. *நன்மை, தீமை, பெருமை, சிறுமை, கருமை, செம்மை* — இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணத்திற்குப் பெயராம். இவ்வாறு, குணத்திற்குப் பெயராய் வருவது *குணப்பெயர்* அல்லது *பண்புப் பெயர்* எனப்படும்.

6. வருதல், ஈகை, செலவு, பழக்கம், மறதி, கொடை — இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழிலுக்குப் பெயராம். இவ்வாறு தொழிலுக்குப் பெயராய் வருவது *தொழிற்பெயர்* எனப்படும்.

மேற்கண்டவாறு பெயர்ச் சொற்கள் *பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர்* என ஆறு வகைப் படும்.

பயிற்சி

1. பொருட்பெயர் முதலிய ஆறு வகைப் பெயர்ச்சொற் களுக்கும் இங்கே கூறப்படாத உதாரணங்கள் சில கூறுக.
2. பின்கண்ட வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்கள் இன்னவகையைச் சார்ந்தவை எனப் பின்கண்டவாறு அட்டவணையிட்டுக் காட்டுக.

   (1) வேலனும் கந்தனும் பள்ளிக்குச் சென்றூர்கள்.
   (2) மாலையில் விளையாடுதல் உடலுக்கு நன்மை தரும்
   (3) குளத்தில் நிறைய மீன்கள் உள்ளன.
   (4) இந்த ஆண்டு விஜய ஆண்டு எனப்படும்.
   (5) குதிரையின் கழுத்தில் மயிர் அடர்ந்து இருக்கும்.

வாக்கியத்தின் எண்	பெயர்ச்சொற்கள்	இன்னவகைப் பெயர்ச் சொல் என்பது

2. வினைச்சொல்

வா — இது ஒரு வினைப்பகுதி. இதிலிருந்து *வந்தேன், வந்தாய், வந்தான், வருகிறேன், வருகிறாய், வருகிறான், வருவேன், வருவாய், வருவான், வந்த, வருகிற, வரும், வந்து, வர, வரின்* எனப் பல வினைச்சொற்களை உண்டாக்கலாம்.

இவற்றுள், வந்தேன், வந்தாய், வந்தான், வருகிறேன், வருகிறாய், வருகிறான், வருவேன், வருவாய், வருவான் என்பன பொருள் முற்றுப்பெற நிற்கும் வினைச்சொற்கள் ஆகும். ஆதலால் இவை ***முற்று வினைகள்*** என்று சொல்லப்படும். முற்றுவினைகளை ***வினைமுற்றுக்கள்*** என்று சொல்லலாம்.

வந்த, வருகிற, வரும், வந்து, வா, வந்தால் என்பவை பொருள் முடிவு பெறாத வினைச்சொற்கள். ஆகும். பொருள் முடிவு பெறாத வினைச்சொற்கள் ***எச்சவினைகள்*** என்று சொல்லப்படும். இதனால் வினைச்சொற்கள் ***முற்று வினைகள், எச்ச வினைகள்*** என இருவகைப்படும் என அறியலாம்.

வினைமுற்று வகைகள்

1. ***வந்தான், தந்தார், போனார்கள்*** — இவ்வினைச்சொற்களில் செயல் முன்னமே நடந்து விட்டதைக் காண்க. இவ்வாறு, செயல் முன்னபே நடந்து விட்டதைத் தெரிவிப்பது ***இறந்தகாலம்*** ஆகும். இறந்த காலத்தில் வரும் வினைமுற்றுக்கள் ***இறந்தகால வினைமுற்றுக்களாம்.***

2. **வருகிறான், தருகிறார்கள், போகின்றன**—இவ்வினைச் சொற்களில் செயல் அப்போது நடைபெறுகிறது. தொழில் நடைபெற்றுக் கொண்டு இருப்பதைத் தெரிவிக்கும் காலம் **நிகழ்காலம்** ஆகும். நிகழ்காலத்தில் வரும் **வினைமுற்றுக்கள்** **நிகழ்கால வினைமுற்றுக்களாம்.**

3. **வருவான், தருவேன், போவோம்**—இவ் **வினைமுற்றுக்களில்** செயல் பின்னர் நடைபெறப் போகின்றது. இவ்வாறு, தொழில் பின்னர் நடைப் பெறப்போவதைத் தெரிவிப்பது **எதிர்காலம்** ஆகும். எதிர்காலத்தில் வரும் **வினைமுற்றுக்கள்** **எதிர்கால வினைமுற்றுக்களாம்.**

காலம்—**இறந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம்** என மூவகைப்படும். காலத்தை ஒட்டி வினை முற்றுக்களும்—**இறந்தகால வினைமுற்றுக்கள், நிகழ்கால வினைமுற்றுக்கள், எதிர்கால வினை முற்றுக்கள்** என மூவகைப்படும்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்றுக்களை எடுத்தெழுதி அவை இன்ன கால வினைமுற்றுக்கள் என்றும் குறிக்க:

1. கம்பர் இராமாயணம் பாடினார்.
2. வயலில் உழவர் உழுகின்றனர்.
3. நாளைக்கு மழை வரும்.
4. அந்தக் குதிரை மிகவும் வேகமாய் ஓடிற்று.
5. அவன் அடி பொறுக்கமாட்டாமல் அழுதான்.
6. சென்னைக்குச் சென்றவர் நாளைக்கு வருவார்.

3. எண்ணுப் பெயர்கள்

தமிழில் எண்களைக் குறிக்கும் சொற்கள் எண்ணுப் பெயர்கள் எனப்படும். அவை பின் வருமாறு.

ஒன்று	பதினொன்று	முப்பது
இரண்டு	பன்னிரண்டு	நாற்பது
மூன்று	பதின்மூன்று	ஐம்பது
நான்கு	பதினான்கு	அறுபது
ஐந்து	பதினைந்து	எழுபது
ஆறு	பதினாறு	எண்பது
ஏழு	பதினேழு	தொண்ணூறு
எட்டு	பதினெட்டு	நூறு
ஒன்பது	பத்தொன்பது	ஆயிரம்
பத்து	இருபது	பதினாயிரம்

நூறாயிரம் அல்லது இலக்கம்.
பத்து நூறாயிரம் அல்லது பத்திலக்கம்.
நூறு நூறாயிரம் அல்லது கோடி.

எண்கள் பொருள்களோடு பொருந்தி வரும் போது அவற்றைக் குறிக்கும் பெயர்கள் பின்கண்ட வாறு பலவகையாக வரும்.

(1)

ஒரு பொருள்	எண் பொருள்
இரு பொருள்	ஒன்பான் பொருள்
முப் பொருள்	பதின் பொருள்
நாற் பொருள்	நூற்றுப் பொருள்

ஐம் பொருள்	ஆயிரப் பொருள்
அறு பொருள்	இலக்கப் பொருள்
எழு பொருள்	கோடிப் பொருள்

(2)

ஒருவர்	பதினொருவர்	முப்பதின்மர்
இருவர்	பன்னிருவர்	நாற்பதின்மர்
மூவர்	பதின்மூவர்	ஐம்பதின்மர்
நால்வர்	பதினால்வர்	அறுபதின்மர்
ஐவர்	பதினைவர்	எழுபதின்மர்
அறுவர்	பதினறுவர்	எண்பதின்மர்
எழுவர்	பதினெழுவர்	தொண்ணூற்றுவர்
எண்மர்	பதினெண்மர்	நூற்றுவர்
ஒன்பதின்மர்	பத்தொன்பதின்மர்	ஆயிரவர்
பதின்மர்	இருபதின்மர்	பதினாயிரவர்
இலக்கம்பேர்	கோடிப்பேர்	

(3)

ஒன்றாவது	ஆறாவது	இருபதாவது
இரண்டாவது	ஏழாவது	நூறாவது
மூன்றாவது	எட்டாவது	ஆயிரத்தது
நான்காவது	ஒன்பதாவது	இலக்கத்தது
ஐந்தாவது	பத்தாவது	கோடியது

பயிற்சி

பின்கண்டவைகளை வாக்கியங்களில் அமைக்க:

1. ஐந்து எட்டு ஒன்பது, தொண்ணூறு ஆயிரம்.
2. அறு பொருள், எண் பொருள், ஆயிரப் பொருள், கோடிப்பொருள்.
3. நால்வர், எண்மர், ஒன்பதின்மர், பன்னிருவர், ஆயிரவர்
4. ஏழாவது, பத்தாவது, ஆயிரத்தது, கோடியது.

4. அடைமொழிகள்

பின்வருவனவற்றைக் கவனி:

(1) நல்ல பையன்
(2) நீண்ட பலகை
(3) சிவப்பு மை.

மேற்கண்ட சொற்றொடர்களில்:

1. நல்ல என்பது பையனுடைய தன்மையை அறிவித்து, பையன் என்னும் பெயர்ச்சொல்லை அடுத்து நிற்கிறது.

2. நீண்ட என்பது பலகையின் தன்மையை அறிவித்து, பலகை என்னும் பெயர்ச்சொல்லை அடுத்து நிற்கிறது.

3. சிவப்பு என்பது மையினுடைய தன்மையை அறிவித்து, மை என்னும் பெயர்ச்சொல்லை அடுத்து நிற்கிறது.

இவ்வாறு பெயர்களின் தன்மையை அறிவிப்பனவாய்ப் பெயர்களை அடுத்து வரும் சொற்கள் பெயர் அடைமொழிகள் எனப்படும்.

பின்கண்டவற்றைக் கவனி:

(1) வேகமாக நடந்தான்
(2) நன்றாகப் படித்தான்
(3) விளக்கமாகக் கூறினான்

மேற்கண்ட சொற்றொடர்களில் :

1. வேகமாக என்பது, எங்ஙனம் நடந்தான் என, அந்த வினையினுடைய தன்மையை அறிவித்து, நடந்தான் என்னும் வினைச்சொல்லை அடுத்து நிற்கிறது.

2. நன்றாக என்பது, எங்ஙனம் படித்தான் என, அவ்வினையினுடைய தன்மையை அறிவித்து. படித்தான் என்னும் வினைச்சொல்லை அடுத்து நிற்கிறது.

3. விளக்கமாக என்பது எங்ஙனம் கூறினான் என, அவ்வினையினுடைய தன்மையை அறிவித்து. கூறினான் என்னும் வினைச்சொல்லை அடுத்து நிற்கிறது.

இவ்வாறு, வினைகளின் தன்மையை அறிவிப்பதாய், வினைகளை அடுத்துவரும் சொற்கள் வினை அடைமொழிகள் எனப்படும்.

ஆகவே அடைமொழிகளாவன, பெயர்வினைகளின் தன்மைகளை அறிவிப்பனவாய் அவற்றையடுத்து வரும் மொழிகள் ஆகும். அவை பெயர் அடைமொழிகள், வினை அடைமொழிகள் என இருவகைப்படும்.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களிலுள்ள பெயர்வினை அடைமொழிகளை முறையே எடுத்தெழுதுக.

1. அந்த அழகான குதிரை விரைவாக ஓடிற்று.
2. அந்தப் பெரிய குளத்தில் மலர்ந்த தாமரைப் பூக்கள் உள்ளன.

3. அந்த உயரமான கோபுரத்தின்மீது பெரிய கழுகு அமைதியாக உட்கார்ந்திருக்கிறது.

4. கமலம் நேர்த்தியான புடவை வாங்கினாள்.

5. அந்தச் சிறிய வீட்டின் கூரை அழிந்து கிடந்தது.

5. சொற்கள் இடத்திற்கேற்பப் பொருள் மாறுபட்டு வருதல்

பின்கண்ட வாக்கியங்களைக் கவனி:

1. நாம் இந்தப் பெரிய உலகத்தில் வசிக்கிறோம்.
2. அவன் நடத்தையைக் கண்டு உலகம் சிரித்தது.

இவற்றுள் முதல் வாக்கியத்தில் உலகம் என்பது இடத்தைக் குறிக்கிறது. இரண்டாவது வாக்கியத்தில் உலகம் என்பது உலகத்திலுள்ள மக்களைக் குறிக்கிறது.

இவ்வாறே கீழ்க்கண்ட சில உதாரணங்களிலும் சொற்கள் பொருள் மாறுபட்டு வருவதைக் காண்க:

(1) சிவபெருமான் கொன்றைவேந்தன் ஆவார்.

மாணிக்கம் கொன்றைவேந்தன் படித்தான்.

(2) அவன் முடியில் மயிர் இல்லை.
அரசன் முடி தரித்தான்.

(3) வேலன் சிவப்பு உடுத்தான்.
அந்த வயலில் சிவப்பு உழுதது.

(4) அவன் அழகிய கண்ணன்.
கண்ணன் பள்ளிக்குச் சென்றான்.

(5) விளக்கு நன்றாக எரிகிறது.
விளக்குக் கீழே விழுந்து உடைந்து விட்டது.

இவற்றால் சொற்கள் இடத்திற்குத் தக்கவாறு பொருள் வேறுபட்டு வருவதை அறிக.

பயிற்சி

மேற்கண்ட உதாரணங்களைப்போல நீங்கள் சில உதாரணங்களைக் கூறுங்கள்.

6. ஒரு பொருட் பலசொற்கள்—நுட்பமான பொருள் வேறுபாடுகள்

1. தந்தை மகனைக் கடைக்குப் போகச் சொன்னார். இங்குச் சொன்னார் என்பது சாதாரணமாகச் சொன்னார் என்று பொருள்படும்.

2. ஆசிரியர் மாணவர்க்குப் பொருள் உரைத்தார். இங்குச் சொல்லுதலாகிய பொருளையே கொண்ட உரைத்தார் என்னும் சொல் விளக்கிக் கூறினார் எனப்பொருள்படும்.

3. அவன் தம்பியைப் பார்த்து என் செய்தாய் என்று கழறினான். இங்குச் சொல்லுதலாகிய

பொருளையே உடைய கூறினான் என்பது கோபித்துக் கூறினான் எனப்பொருள்படும்.

மிருகம், பறவை முதலியவற்றின் ஒலிக் குறிப்பிற்கு வேறு வேறு சொற்கள் வழங்குகின்றன. அவையெல்லாம் சத்தம் செய்வதையே குறித்தல் காண்க.

(உ-ம்) நாய் குரைக்கிறது.
யானை பிளிறுகிறது.
கோழி கூவுகிறது.
காக்கை கரைகிறது.

உண்மை, வாய்மை, மெய்ம்மை என்னும் சொற்கள் மூன்றும் பொய் பேசாமையைக் குறிப்பன. ஆயினும் அவற்றில் நுட்பமான பொருள் வேறுபாடு உண்டு. அதாவது:

(1) உண்மை என்பது உள்ளத்தின் பொய்யாமையைக் குறிப்பது; (2) வாய்மை என்பது வாயின் அதாவது பேச்சின் பொய்யாமையைக் குறிப்பது; (3) மெய்ம்மை என்பது மெய்யின் அதாவது உடலின் பொய்யாமையைக் குறிப்பது.

பயிற்சி

1. மேற்கண்டவாறு பொருள் வேறுபடும் சொற்கள் சில கூறுக.

2. பின்கண்ட சொற்களை வாக்கியங்களில் அமைக்க: உரைத்தான், கழறினேன், சீறுகிறது, உறுமுகிறது, கத்துகிறது, மெய்ம்மை, வாய்மை, உண்மை.

V. புணர்ச்சி

பின் கண்டவைகளைக் கவனி;—

(1) அவன் + ஓடினான் = அவனோடினான்

(2) பலா + பழம் = பலாப்பழம்

இங்கு முதல் உதாரணத்தில் **அவன்** என்னும் சொல்லோடு **ஓடினான்** என்னும் சொல் சேர்ந்து *அவனோடினான்* என்று ஆகியிருக்கிறது. இதில் முதலில் உள்ள **அவன்** என்னும் சொல் *நிலைமொழி* எனப்படும். பின்னர் அதனோடு சேரவந்த சொல்லாகிய **ஓடினான்** என்பது *வருமொழி* எனப்படும். அவனோடினான் என்பது நிலைமொழியும், வருமொழியும் புணர்ந்த சொற்றொடர். இதனால் இரண்டாம் வாக்கியத்தில் **பலா** என்பதை *நிலைமொழி* எனவும் **பழம்** என்பதை *வருமொழி* எனவும் கூறுகிறோம் அல்லவா? நிலைமொழியும், வருமொழியும் சேர்ந்து பொருந்துவது **புணர்ச்சி** எனப்படும்.

1. இயல்பு புணர்ச்சி — விகாரப் புணர்ச்சி

பின் கண்டவைகளைக் கவனி:—

(1) பலா + மரம் = பலாமரம்.

(2) பலா + பழம் = பலாப்பழம்.

இங்கு முதல் உதாரணத்தில் **பலா** என்னும் நிலை மொழியும், **மரம்** என்னும் வருமொழியும் சேர்ந்த

போது யாதொரு மாறுபாடும் ஏற்படாமல் ஒன்று சேர்ந்துள்ளன. இவ்வாறு புணருவது *இயல்பு புணர்ச்சி* எனப்படும்.

இரண்டாவது உதாரணத்தில் *பலா* என்னும் நிலைமொழியும் *பழம்* என்னும் வருமொழியும் சேர்ந்த போது இடையில் *ப்* என்னும் ஒரெழுத்துத் தோன்றி யிருப்பதைக் காண்க. இவ்வாறு இடையில் மாறுபாடு தோன்றப் புணர்வது *விகாரப் புணர்ச்சி* எனப்படும். இங்கு விகாரப் புணர்ச்சியில் புதிதாக எழுத்துத் தோன்றியுள்ளது. இது *மிகுதல்* ஆகும்.

பின்கண்ட உதாரணங்களைக் கவனி:—

(1) மண் + குடம் = மட்குடம்.

(2) மரம் + வேர் = மரவேர்.

இங்கு முதல் உதாரணத்தில் நிலைமொழியீற்றில் உள்ள ணகரம் டகரமாகத் திரிந்து புணர்ந்தது. இதுவும் *விகாரப் புணர்ச்சி* ஆகும். இங்கு எழுத்துத் திரிந்து வந்தது *திரிதல்* எனப்படும்.

இங்குள்ள இரண்டாம் உதாரணத்தில் நிலை மொழி ஈற்றில் உள்ள *ம்* என்னும் எழுத்துப் போய் விட்டது. இதுவும் விகாரப் புணர்ச்சியே. இங்கு எழுத்துக் காணமல் போனது *கெடுதல்* எனப்படும்.

தெரிந்துகொள்:

புணர்ச்சி இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி என இருவகைப்படும். விகாரப் புணர்ச்சியில் தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூவகை விகாரங்கள் ஏற்படும்.

2. தனிக் குறிலைச்சாராத மெய்யின்முன் உயிர் புணர்தல்

(1) நூல் + ஏணி = நூலேணி.
(2) மகன் + அல்லன் = மகனல்லன்

இங்குள்ள நிலைமொழிகளின் ஈற்றில் மெய் யெழுத்து உள்ளது. இந்த மெய்யின்முன் வருமொழி முதலில் உள்ள உயிரெழுத்து சேர வந்துள்ளது. நிலைமொழி மெய்க்கு முன் தனிக்குறில் இல்லை. அதாவது முதல் உதாரணத்தில் நூ என்னும் தனி நெடில் உள்ளது; இரண்டாவது உதாரணத்தில் ம, க என்னும் இரண்டு குறில்கள் உள்ளன. இவ்வாறு தனிக் குறிலைச் சாராத மெய்யின்முன் உயிர் வந்தால் இயல்பாகப் புணரும். இங்கு நூலேணி, மகனல்லன் என்று இயல்பாகப் புணர்ந்திருத்தல் காண்க. இங்கு ல்+ஏ=லே என்று வந்ததும், ன்+அ=ன என்று வந்ததும் மெய்யும் உயிரும் கூடி உயிர்மெய் யெழுத்து ஆயினஆம். இவ்வாறு உயிர்மெய்யெழுத்து ஆவது இயல்பு புணர்ச்சியாகவே கொள்ளப்படும்.

3. தனிக் குறிலைச் சார்ந்த மெய்யின்முன் உயிர் புணர்தல்

(1) பல் + அழகு = பல்லழகு.
(2) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

இங்கு நிலைமொழி ஈற்றில் மெய் உள்ளது. அது தனிக்குறிலைச் சார்ந்து உள்ளது. தனிக்குறிலைச் சார்ந்த மெய்யின்முன் உயிர் வந்தால், அந்த மெய்

இரட்டிக்கும்; அதாவது இரண்டாகும். இங்குப் பல்லழகு, கல்லெறிந்தான் என்பனவற்றுள் லகரம் இரட்டித்தது காண்க.

4. வல்லெழுத்து மிகும் இடங்கள்

(1) அ + கடை = அக்கடை
இ + செடி = இச்செடி
எ + படை = எப்படை

இங்குச் சுட்டுச் சொற்களின்முன் வல்லினம் மிகுந்தது.

(2) கண்ணனை + கண்டேன் = கண்ணனைக் கண்டேன்
என்னை + பார் = என்னைப்பார்.
பசுவை + துரத்து = பசுவைத் துரத்து

இங்கு இரண்டாம் வேற்றுமை ஐ உருபின்முன் வல்லினம் மிகுந்தது.

(3) வேலனுக்கு + தா = வேலனுக்குத்தா
வீட்டிற்கு + சென்றான் = வீட்டிற்குச் சென்றான்
கடைக்கு + போனான் = கடைக்குப் போனான்

இங்கு நான்காம் வேற்றுமைக்குரிய கு உருபிற்கு முன் வல்லினம் மிகுந்தது.

பயிற்சி

பின்கண்ட நிலைமொழி வருமொழிகளைச் சேர்த்து அவை எவ்வாறு புணர்ந்துள்ளன என விளக்குக.

1. பலா + மரம்
2. பலா + பழம்
3. வால் + அறுந்தது
4. கண் + எங்கே
5. எ + படம்
6. அ + தட்டு
7. என்னை + பார்த்தான்
8. பாம்பை + கொன்றான்
9. காட்டிற்கு + சென்றான்
10. விலைக்கு + பெற்றான்

VI. நிறுத்தற் குறிகள்

நாம் புத்தகத்தை வாசிக்கும்போது அதிலுள்ள வாக்கியங்கள் நீண்டவையாக இருந்தால் ஆங்காங்கு நிறுத்திப் படிப்பதற்குரிய இடங்களைக் கவனித்து நிறுத்திப் படிக்கவேண்டும். இல்லாவிட்டால் பொருள் விளங்காது. இப்படி எந்தெந்த இடங்களில் எவ்வளவு நிறுத்திப் படிக்கவேண்டும் என்பதைக் குறிக்கச் சில குறிகள் உள்ளன. அவை **நிறுத்தற் குறிகள்** எனப்படும்.

நிறுத்தும் அளவை மாத்திரைக் கணக்கில் கூறுவது வழக்கம். இயல்பாக ஒரு முறை கண் இமைத்தல் அல்லது கைந்நொடித்தல் ஒரு மாத்திரை ஆகும்.

, இது காற்புள்ளி; இது காமா என்றும் சொல்லப்படும். ஒரு மாத்திரை நேரம் நிறுத்தற்குரிய இடங்களில் இது இடப்படும்.

(உ-ம்) 1. இராமா, வா.

2. வேலன் கடைக்குப் போய், சில பழங்களை வாங்கி வந்தான்.

; இது அரைப்புள்ளி: இது செமிக்கோலன் என்றும் சொல்லப்படும். இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தற்குரிய இடங்களில் இது இடப்படும்.

(உ-ம்) 1. இராமன் தஞ்சைக்குச் சென்றான்; ஆனால் சென்ற காரியம் பலிக்கவில்லை.

2. குதிரை மிகவும் விலை பெற்றதே; ஆயினும் பந்தயத்தில் வெல்லவில்லை.

: இது முக்காற்புள்ளி; இது கோலன் என்றும் கூறப்படும். மூன்று மாத்திரை நேரம் நிறுத்தற்குரிய இடங்களில் இது குறிக்கப்படும்.

(உ-ம்) 1. இங்குள்ள கூடையில் இருக்கும் பழ வகைகளாவன: மா, கொய்யா, மாதுளை என்பன.

2. வேலன் கொண்டுவந்த பொருள்களாவன: சீப்பு, கண்ணாடி, சோப்பு, மைக்கூடு ஆகியவை.

. இது முற்றுப்புள்ளி; இது புல்ஸ்டாப் என்றும் சொல்லப்படும். இக்குறி வாக்கியங்களின் முடிவில் இடப்படும். இக்குறியிட்ட இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) 1. கந்தன் வேலை செய்தான்.

2. வண்டியில் குதிரையைப் பூட்டி ஓட்டினான்.

? இது வினாக்குறி; இது இண்டராகேஷன் மார்க் என்றும் கூறப்படும். வினவ வேண்டிய இடங்களில் இது குறிக்கப்படும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) 1. என்னோடு விளையாட வருகிறாயா?

2. நீ பாடம் படித்தாயா?

! இது உணர்ச்சிக் குறி. இது எக்ஸ்கிளமேஷன் மார்க் என்றும் சொல்லப்படும். மகிழ்ச்சி கோபம், ஆச்சரியம் முதலிய உணர்ச்சிகளைக் குறிக்க வேண்டிய இடங்களில் இக்குறி இடப்படும். இங்கு நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(உ-ம்) 1. பயமாயிருக்கிறதே!

என்ன வார்த்தை சொன்னாய் நீ!

எவ்வளவு அழகாய் இருக்கிறது!

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களில் உரிய இடங்களில் தக்க நிறுத்தற்குறிகளை இடுக.

1. வேலா நீ கூறுவது சிறிதும் சரியாக இல்லை.
2. அவன் நல்ல பையன் அதனால் அவனை எல்லோரும் விரும்புகிறார்கள்
3. நீ ஏன் அங்கே சென்றாய்
4. உன் அண்ணன் பெயர் என்ன
5. இவ்வரிசையில் உள்ள பொருள்களாவன:— தராசு படிக்கல கத்தி அரிவாள் பலகை என்பனவாம்

பயிற்சி வினாக்கள்

1. ஒலி எழுத்து என்பது யாது? வரியெழுத்து என்பது யாது?

2. உயிர் எழுத்துக்களுக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

3. உயிர்மெய்யெழுத்துக்கள் எவை? உயிர் மெய் எழுத்து ஆவதற்கு உயிரும் மெய்யும் எப்படிச் சேரவேண்டும்?

4. ரகர றகர பேதம் விளங்குமாறு இரண்டு உதாரணங்கள் தருக.

5. ந, ன இவை எவ்வாறு பிறக்கும்? மொழி களில் இவை எங்கு வரும்?

6. ல, ழ, ள இவற்றின் பிறப்பு இடங்களை முறையே கூறுக. இவை வரும் சொற்கள் பொரு ளில் வேறுபடுவதை விளக்குக.

7. பின்வருவனவற்றிலுள்ள பகுதிகளைத் தனியே எடுத்து எழுதுக.

வலைஞன், சென்றான், பொன்னன், தொட்டான், தருகிறான், கூனி, மனைவி, தேடினன், பாடினள், இருப்பான்.

8. தமிழில் வந்து வழங்கும் வேற்றுமொழிச் சொற்களுக்கு ஐந்து உதாரணங்கள் கூறுக. அவை இன்ன மொழிச் சொற்கள் எனப் புலப்படுத்துக.

9. வரவு சிலவு; யோஜனை செய்தான்; ஜாமான் வாங்கினான்; குருதையேறினான்; கொரங்கைக் கண்டான். மேற்கண்ட சொற்றொடர்களைத் திருத்துக.

10. ஆறுவகைப் பெயர்ச் சொற்களுக்கும் முறையே இரண்டிரண்டு உதாரணங்கள் தருக.

11. முக்கால வினைமுற்றுக்களுக்கும் முறையே மும்மூன்று உதாரணங்கள் தருக.

12. ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுவதற்கு இரண்டு உதாரணங்கள் தருக.

13. பின்கண்ட நிலைமொழி வருமொழிகளைப் புணர்த்தி, அவை என்ன வேறுபாடு அடைந்தன எனக் கூறுக.

மரம் + இருந்தது; மரம் + நாய்; முள் + எடு; அ + குதிரை; என்னை + பார்த்தான்; எனக்கு + தந்தான்.

14. முற்றுப்புள்ளி எங்கு இடவேண்டும்? அது உள்ள இடத்தில் எத்தனை மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்?

15. உணர்ச்சிக் குறியிடுதற்குரிய இடங்கள் வருமாறு மூன்று உதாரணங்கள் கொடு.

செந்தமிழ் இலக்கணம்

இரண்டாம் படிவம்—சிறப்புப்பகுதி

வித்துவான், V. நரசிம்மன், M. A.

வித்துவான், C. இராமசாமி

தமிழ் ஆசிரியர்–கழக உயர்நிலைப்பள்ளி, வத்தலகுண்டு.

★

ஜெனரல் புக் கம்பெனி

கும்பகோணம்

பதிப்புரிமை]

[விலை 0—7—0

முதற் பதிப்பு—1954
இரண்டாம் பதிப்பு—1955

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

முன்னுரை

செந்தமிழ் இலக்கணம் என்னும் இந்நூல், முதன் மூன்று படிவச் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்க்கு உரியதாக 1951-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தை (syllabus) அடிபொற்றி அம்மாணவர்கட்கு நன்கு பயன்படும் வகையில் இயற்றப் பட்டுள்ளது.

உதாரணங்களால் விதியைக் கற்பிப்பதாகிய அநுமான முறை (inductive method) இந்நூலில் கையாளப்படுகின்றது. மாணவர் விருப்பத்தோடு இலக்கணங் கற்க இது ஏதுவாகும். இதில் கொடுக்கப் பட்டுள்ள உதாரணங்கள் எளிமையும் விளக்கமும் உடையவை. ஆங்காங்குப் புதிய முறையில் போதிய பயிற்சிகள் தரப்பட்டுள்ளன. இறுதியிலுள்ள தேர்வு வினாக்கள் கற்றவற்றைக் கருத்திற்குக் கொணர்ந்து பயில பயன்படும்.

கல்வித் துறை போகியோர் இதனை ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

ஆக்கியோர்கள்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
I.	எழுத்து:		
(1)	குறில், நெடில்	....	1
(2)	மெய்யெழுத்து வகை	....	2
II.	சொல் ஆக்கம்:		
(1)	விகுதி	....	6
(2)	இடைநிலை	....	9
III	சொல்:		
(1)	செந்தமிழ், கொடுந்தமிழ்	....	11
(2)	வழு, வழுவமைதி	....	12
(3)	வழூஉச் சொற்களும் திருத்தமும்	....	14
(4)	குறிப்புப் பெயர்கள்	....	15
(5)	வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்	....	16
(6)	காலம்	....	18
(7)	திணை	....	19
(8)	பால்	....	20
(9)	எண்	....	21
(10)	இடம்	....	22
(11)	வேற்றுமை	....	25
(12)	சொல்லிலக்கணம் கூறுதல்	....	30
(13)	சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்	....	32

IV. புணர்ச்சி:

(1) எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி 34
(2) உயிர் முன் உயிர் புணருதல் 37
(3) வல்லெழுத்து மிகும் இடங்கள் 38
(4) மகர ஈறு 39

V. அணி:

(1) உவமை அணி 41
(2) உருவக அணி 43

VI. நிறுத்தற் குறிகள்:

பயிற்சி வினாக்கள் 46

இரண்டாம் படிவம் — சிறப்புப் பகுதி

25 NOV 19..

I. எழுத்து

1. குறில், நெடில்

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ. இந்தப் பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்துக்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றில்,

அ, இ, உ, எ, ஒ—இந்த ஐந்து எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இவை குறுகிய ஓசை உடையனவாய் இருக்கின்றன அல்லவா? ஆதலால் இந்த ஐந்து எழுத்துக்களும் *குற்றெழுத்துக்கள்* எனப்படும்.

குற்றெழுத்தாவது, குறுகிய ஓசையை உடைய எழுத்து. குற்றெழுத்து, *குறில்* என்று சொல்லப்படும்.

உயிரெழுத்துக்களில் *ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ*—என்னும் ஏழு எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். அவை நீண்ட ஓசையை உடையனவாய் இருக்கின்றன அல்லவா? ஆதலால் அவை *நெட்டெழுத்துக்கள்* எனப்படும்.

நெட்டெழுத்தாவது நீண்ட ஓசையை உடைய எழுத்து. நெட்டெழுத்து, *நெடில்* என்றும் சொல்லப்படும்.

உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து உயிர்மெய் எழுத்து என்பதை அறிவீர்கள். ஆதலால் உயிர் எழுத்துக்களிலுள்ள குறில்கள் மெய்யெழுத்துக் களோடு சேர்ந்து உயிர்மெய்க் குறில்கள் ஆகும். உயிர்க்குறில் 5-ம், 18 மெய்யெழுத்துக்களோடும் சேருவதனுல், மொத்தம் 5×18=90 உயிர்மெய்க் குறில்கள் உண்டாகும்.

(உ-ம்) க்+அ=க
ச்+இ=சி
த்+உ=து

உயிர் எழுத்துக்களிலுள்ள 7 நெடில்களும், 18 மெய்யெழுத்துக்களோடும் சேருவதால், மொத்தம் 7×18=126 உயிர்மெய் நெடில்கள் உண்டாகும்.

(உ-ம்) க்+ஆ=கா
ங்+ஈ=ஙீ
ச்+ஊ=சூ

உயிர்மெய்க்குறில் 90-ம், உயிர்மெய் நெடில் 126-ம் சேர்ந்து, மொத்தம் உயிர்மெய் எழுத்துக்கள் 216 சரியாக ஆதலை அறிக.

2. மெய்யெழுத்து வகை

வலி, மெலி, இடை

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இந்த எழுத்துக்கள் மெய் எழுத் துக்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இவற்றுள், க், ச், ட், த், ப், ற்.—இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இவை வலிய ஓசை உடை

யவை ஆகும். ஆதலால் இவை **வலி** அல்லது **வல்லினம்** எனப்படும்.

மெய்யெழுத்துக்களில் ங், ஞ், ண், ந், ம், ன்— இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப்பாருங்கள். இவை மென்மையான ஓசை உடையவை. ஆதலால் இவை **மெலி** அல்லது **மெல்லினம்** எனப்படும்.

மெய்யெழுத்துக்களில் ய், ர், ல், வ், ழ், ள்-இந்த ஆறு எழுத்துக்களையும் உச்சரித்துப்பாருங்கள். இவை வலிய ஓசை உடையவும் அல்ல; மெல்லிய ஓசை உடையவும் அல்ல; இடைப்பட்ட ஓசை உடையவை. ஆதலால் இவை **இடை** அல்லது **இடையினம்** எனப்படும்.

மேற்கண்டவாறு மெய்யெழுத்துக்கள் மூவகைப் படுதலை அறிக.

வலி அல்லது வல்லினம் 6 எழுத்துக்கள். மெலி அல்லது மெல்லினம் 6 எழுத்துக்கள். இடை அல்லது இடையினம் 6 எழுத்துக்கள். மொத்தம் மெய்யெழுத்துக்கள் $3 \times 6 = 18$ ஆவது காண்க.

உயிர்மெய்யெழுத்தில் மெய்யெழுத்து சேர்ந்து உள்ளது அல்லவா? ஆகையால் அதில் மெய்யெழுத்து வகைகளும் இருக்கும். அவ்வகைகளைப் பொறுத்து உயிர்மெய் எழுத்துக்கள் பின்கண்டவாறு பிரிவுபடும்.

வல்லின மெய் + உயிர் = வல்லின உயிர்மெய் எழுத்து. இவை $6 \times 12 = 72$ ஆவது காண்க.

(உ ம்) க் + அ = க

க் + ஆ = கா

மெல்லின மெய் + உயிர் = மெல்லின உயிர்மெய்யெழுத்து. இவை 6 × 12 = 72 ஆவது காண்க.

(உ-ம்) ங் + அ = ங
ங் + ஆ = ஙா

இடையின மெய் + உயிர் = இடையின உயிர் மெய்யெழுத்து. இவை 6 × 12 = 72 ஆவது காண்க.

(உ-ம்) ய் + அ = ய
ய் + ஆ = யா

இன்னும் நன்கு கவனித்தால் வல்லின உயிர் மெய்கள்.

வல்லினம் + உயிர்க்குறில் = வல்லின உயிர் மெய்க் குறில்.

வல்லினம் + உயிர்நெடில் = வல்லின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம்.

வல்லின உயிர்மெய்க் குறில்கள் 6 × 5 = 30.

(உ-ம்) ச் + எ = செ

வல்லின உயிர்மெய் நெடில்கள் 6 × 7 = 42.

(உ-ம்) ச் + ஏ = சே.

இவ்வாறே மெல்லின உயிர்மெய்கள்.

மெல்லினம் + உயிர்க்குறில் = மெல்லின உயிர் மெய்க்குறில்.

மெல்லினம் + உயிர்நெடில் = மெல்லின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம்.

மெல்லின உயிர்மெய்க் குறில் 6 × 5 = 30.

(உ-ம்) ஞ் + உ = ஞு

மெல்லின உயிர்மெய் நெடில் 6 × 7 = 42.

(உ-ம்) ஞ் + ஊ = ஞூ

இவ்வாறே இடையின உயிர்மெய்கள்.

இடையினம் + உயிர்க்குறில் = இடையின உயிர் மெய்க்குறில்.

இடையினம் + உயிர்நெடில் = இடையின உயிர் மெய் நெடில் என இருவகைப்படுவதை அறியலாம். இடையின உயிர்மெய்க் குறில் 6 × 5 = 30.

(உ-ம்) ய் + ஒ = யொ

இடையின உயிர்மெய் நெடில் 6 × 7 = 42.

(உ-ம்) ய் + ஓ = யோ

பயிற்சி

1. பின்கண்ட சொற்களிலுள்ள உயிர், மெய் இவை இன்னவகையைச் சேர்ந்தவை எனக் குறிக்க:

அணில், ஆடை, உலகம், ஊக்கம், பங்கு, பந்தயம், தஞ்சம் ஏவல், ஐயம், ஒப்பு, ஓரம், ஔவியம்.

2. பின்கண்ட சொற்களிலுள்ள உயிர்மெய் எழுத்துக்களை இன்னவகை என்று காரணத்தோடு கூறுக:—

காலம், காரியம், ஞாயிறு, செம்மை, அயோத்தி, இராவணன், கோலம், நாமகள், கண்ணாடி, மாதம், விடை.

II. சொல்லாக்கம்

1. விகுதி

முன்வகுப்பில் பகுதியைப் பற்றி அறிந்தீர்கள். வினைச்சொல்லில் முதலில் உள்ள பிரிவு பகுதி என்பதும், அது தொழிலைக் காட்டும் என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்போது விகுதி, இடைநிலை' இவற்றைப்பற்றி அறிவோம்.

விகுதி, சொற்களின் ஈற்றிலுள்ள உறுப்பாம். வினைச்சொற்களில் விகுதி திணை, பால், எண், இடங்களை உணர்த்தும்; அதாவது தொழில் செய்பவனை உணர்த்தும்.

(உ-ம்)

வினைச்சொல் — விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது

செய்தனன்—அன்—ஆண்பாலை உணர்த்திற்று
பார்த்தான்—ஆன்— ,,

அன், ஆன் என்னும் விகுதிகள் ஆண்பாலை உணர்த்தும்.

கண்டனள்—அள்—பெண்பாலை உணர்த்திற்று
போனாள் —ஆள்— ,,

அள், ஆள் என்னும் விகுதிகள் பெண்பாலை உணர்த்தும்.

வந்தனர் —அர் —பலர்பாலை உணர்த்திற்று
இருந்தார்—ஆர்— ,,

அர், ஆர் என்னும் விகுதிகள் பலர்பாலை உணர்த்தும். மேற்கண்ட ஆறு விகுதிகளும் உயர் திணை, படர்க்கை இடத்தை உணர்த்தியது காண்க. இவற்றுள் அர், ஆர் என்பன பன்மை எண்ணையும், மற்றவை ஒருமை எண்ணையும் உணர்த்தினமை காண்க.

வினைச்சொல்	விகுதி	இன்னதை உணர்த்திற்று என்பது	
நின்றது	து	ஒன்றன்பாலை	உணர்த்திற்று
எண்ணிற்று	று	,,	,,

து, று—என்னும் விகுதிகள் ஒன்றன்பாலை உணர்த்தும்.

ஓடின	அ	பலவின்பாலை	உணர்த்திற்று
ஓடா	ஆ	,,	,,

அ, ஆ—என்னும் விகுதிகள் பலவின்பாலை உணர்த்தும்.

மேற்கண்ட நான்கு விகுதிகளும் அஃறிணை, படர்க்கை இடத்தை உணர்த்தியது காண்க. இவற்றுள் து, று என்பன ஒருமை எண்ணையும், அ, ஆ என்பன பன்மை எண்ணையும் உணர்த்தின.

ஆகவே அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, ஆ என்பன படர்க்கை வினைமுற்று விகுதிகள் ஆகும்.

வினைச்சொல்	விகுதி	இன்னதை உணர்த்திற்று என்பது
வந்தனை	ஐ	முன்னிலை ஒருமையை உணர்த்திற்று.
வந்தாய்	ஆய்	,,
வருதி	இ	,,

ஐ, ஆய், இ என்னும் விகுதிகள் முன்னிலை ஒருமையை உணர்த்தும்.

நடந்தனிர் — இர் — முன்னிலைப் பன்மையை உணர்த்திற்று.
நடந்தீர் — ஈர் — ,,
நடமின் — மின் — ,,

இர், ஈர், மின் என்னும் விகுதிகள் முன்னிலைப் பன்மையை உணர்த்தும். ஆகவே, ஐ, ஆய், இ, இர், ஈர், மின் என்பன முன்னிலை வினைமுற்று விகுதிகளாகும்.

வினைச்சொல்—விகுதி இன்னதை உணர்த்திற்று என்பது
கண்டனென் என் — தன்மை ஒருமையை உணர்த்திற்று.
கண்டேன் — ஏன் — ,,
கண்டனன் — அன் — ,,
காண்பல் — அல் — ,,

என், ஏன், அன், அல் என்னும் விகுதிகள் தன்மை ஒருமையை உணர்த்தும்.

பார்த்தனம் — அம் — தன்மைப் பன்மையை உணர்த்திற்று.
பார்த்தாம் — ஆம் — ,,
பார்த்தனெம்— எம் — ,,
பார்த்தேம் — ஏம் — ,,
பார்த்தோம் — ஓம் — ,,

அம், ஆம், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகள் தன்மைப் பன்மையை உணர்த்தும்.

ஆகவே என், ஏன், அன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம் என்பன தன்மை வினைமுற்று விகுதிகளாம். மேற்கண்டவற்றால் வினைச்சொற்களில் விகுதிகள் தொழிலைச் செய்பவனை உணர்த்தினமை காண்க:

2. இடைநிலை

பகுதி, விகுதி இரண்டையும் பற்றி நீங்கள் அறிவீர்கள். இப்போது இடைநிலையைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள். பெயர் வினைச் சொற்களில் இடையிலுள்ள உறுப்பு இடைநிலை எனப்படும். வினைச்சொற்களில் இடைநிலைகள் காலம் காட்டும்.

(உ-ம்)

வினைச்சொல்	இடைநிலை	இன்னகாலம் காட்டிற்று என்பது
செய்தான்	த்	இறந்த காலம் காட்டிற்று
உண்டான்	ட்	,,
தின்றான்	ற்	,,
போயினான்	இன்	,,
போனான்	ன்	,,
ஓடியது	இ	,,

த், ட், ற், இன், ன், இ என்னும் இடைநிலைகள் இறந்தகாலங் காட்டும் இடைநிலைகளாம்.

ஓடுகிறான்	கிறு	நிகழ்காலம் காட்டிற்று
ஓடுகின்றான்	கின்று	,,
ஓடாநின்றான்	ஆநின்று	,,

கிறு, கின்று, ஆநின்று என்பன நிகழ்காலம் காட்டும் இடைநிலைகளாம்.

படிப்பான் — ப் — எதிர்காலங் காட்டிற்று
செய்வான் — வ் — "
ப், வ் என்பன எதிர்கால இடைநிலைகளாம்.

பயிற்சி

பின்கண்ட வினைமுற்றுக்களில் விகுதி, இடைநிலை இவை களைத் தனியே எடுத்தெழுதி அவை இன்னின்னவற்றைக் காட்டின எனக் குறிக்க:

வந்தேன், செய்தனன், கண்டது, ஓடாநின்றேன், தருகின்ருன், படிப்பான், செய்வேன், வருதி, போதி, கண்டனை, உண்டாய், தருவாய், இருப்பேன், காணுதி, தந்தனென், உண்டோம், தருவேம், காண்பாம், வருவல், நில்லா, ஓடா, நிற்பல், செய்தனெம், இருப்போம்.

III. சொல்

1. செந்தமிழ், கொடுந்தமிழ்

செந்தமிழ் என்பது தமிழ் நாட்டின் ஒரு பகுதியான செந்தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழ். பாண்டிய நாட்டைச் செந்தமிழ்நாடு என்பர். இந்தச் செந்தமிழ் நாட்டைச் சுற்றியிருந்த தென் பாண்டி நாடு, குட்டநாடு, குடநாடு முதலான 12 நாடுகள் முற்காலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்திருந்தன. அவற்றில் பேசப்பட்டுவந்த தமிழ் கொடுந்தமிழ் எனப்பட்டது. கொடுந்தமிழாவது சிறிது மாறிய தமிழாம்.

(உ-ம்)

செந்தமிழ்		கொடுந்தமிழ்
தாய்	—	தள்ளை
தந்தை	—	அச்சன்
தோழன்	—	எலுவன்
தோழி	—	இகுளை
வயல்	—	செய்
சிறு குளம்	—	பாழி
சோறு	—	சொன்றி
புளி	—	எகின்
ஆ	—	பெற்றம்
தண்ணீர்	—	வெள்ளம்
பூனை	—	பூச்சா
சொல்லு	—	செப்பு

பயிற்சி

1. இங்கே கூறப்படாத சில கொடுந்தமிழ்ச் சொற்களைக் கூறுக.

2. உங்கள் பாடங்களில் கொடுந்தமிழ்ச் சொற்கள் ஏதேனும் இருந்தால் எடுத்து எழுதுக.

2. வழூ—வழூவமைதி

பெரியோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ, அவ்விதமே நாமும் அப்பொருளை அச்சொல்லால் குறித்து வழங்க வேண்டும். அவ்வாறன்றி வேறாக வழங்கினால் அது வழூ ஆகும். (வழூ—குற்றம்.)

(உ-ம்)

வழூ அல்லாதது		வழூ உள்ளது
பசுக்கன்று	—	பசுக்குட்டி
வாழைக்கன்று	—	வாழைச்செடி
குதிரைக்குட்டி	—	குதிரைக்கன்று
தென்னம்பிள்ளை	—	தென்னஞ்செடி
சிங்கம் கர்ஜிக்கிறது	—	சிங்கம் கத்துகிறது
நாய் குரைக்கிறது	—	நாய் கர்ஜிக்கிறது
காகம் கரைகிறது	—	காகம் கத்துகிறது

எழுவாய் பயனிலைகள் திணை, பால், எண், இடம், காலம் இவற்றால் ஒத்து வரவேண்டும். அவ்வாறு வராவிடில் அவையும் வழூ ஆகும்.

(உ-ம்) அவன் வந்தது —திணை வழு
அவள் வந்தான் —பால் வழு
பசுக்கள் வந்தது —எண் வழு
நான் வந்தான் —இட வழு
நேற்று வருவான்—கால வழு

சில சிறப்பான காரணங்களால் வழுவானவை களும், வழு அல்லாதவைகளாகப் பெரியோர்களால் கொள்ளப்பட்டு இருக்கின்றன. அவை வழுவமைதி எனப்படும்.

(உ-ம்) முருகனும் ஆடுகளும் வந்தார்கள் — இங்கு எழுவாய் இருதிணைகளும் கலந்ததாக இருக் கிறது. பயனிலையை அதற்கேற்றாற்போல் தர இயலாது. ஆகையால் உயர்திணைச் சிறப்பு நோக்கி உயர்திணைக்குரிய பயனிலை தரப்பட்டது. இது திணை வழுவமைதி.

என் அம்மா அழாதே — இவ்வாறு அன்பினால் ஆண் குழந்தையைப் பார்த்துச் சொல்வது பால் வழுவமைதி.

பூவெல்லாம் உதிர்ந்து விட்டது — பல பூக்கள் உதிர்ந்த விடத்து இவ்வாறு கூறுவது எண் வழுவமைதி.

இராமன் தாய் இவ்விதம் செய்வேனா!— இங்குப் படர்க்கைப் பயனிலை வரவேண்டிய இடத்தில் தன் மைப் பயனிலை வந்தது இடவழுவமைதி.

நீ அங்குச் சென்றால் அழிந்தாய்! — இங்குத் துணிவினால் எதிர்காலம் இறந்தகாலமாக வந்தது காலவழுவமைதி.

பயிற்சி

1. பின்கண்டவற்றிலுள்ள வழுக்களைத் திருத்துக:
   ஆடு மேய்ப்பவன் பாகன்; கோழிக்குட்டி; புலி பிளிறுகிறது; அண்ணன் வந்தது; நாளை சென்றான்.

2. பின்கண்டவை எவ்வகை வழுவமைதி எனக் கூறுக.
   இரண்டு கண்ணும் சிவந்தது; இங்கு வந்தால் விழுந்தாய்; பல்லெல்லாம் உதிர்ந்து விட்டது; பசுக்களும் மனிதரும் வந்தனர்; கந்தன் தம்பி இதைச் செய்வேனோ!

3. வழூஉச் சொற்களும் திருத்தமும்

சென்ற வகுப்பில் சில வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் பற்றி அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அவ்வகையில் சிலவற்றைக் கூறுவோம்.

(உ-ம்)

வழூஉச்சொல்		திருத்தம்
சுவற்றில்	—	சுவரில்
பசுங்கன்று	—	பசுக்கன்று
சிகப்பு	—	சிவப்பு
தலகாணி தலவாணி தலயாணி	—	தலையணை
அரணாள்	—	அரைஞாண்

தவக்களை	—	தவளை
எம்பளது	—	எண்பது
பொம்பளை	—	பெண்பிள்ளை
ப்ாவக்காய்	—	பாகற்காய்
வாத்தியார்	—	உபாத்தியாயர்
சோறு தின்றான்	—	சோறு உண்டான்
கண்ணு	—	கன்று

பயிற்சி

மேற்கண்ட விதமான வழூஉச் சொற்கள் சிலவற்றையும் அவற்றின் திருத்தத்தையும் கூறுக.

4. குறிப்புப் பெயர்கள்

இராமன் பள்ளிக்குச் சென்றான்; அங்கு அவன் கல்வி கற்றான். இவ்வாக்கியத்தில் *அவன்* என்பது இராமனைக் குறிக்கிறது.

பசு வந்தது; அது பால் தந்தது. இவ்வாக்கியத்தில் *அது* என்பது பசுவைக் குறிக்கிறது.

இராமன் தான் நாளை வருவதாகத் தெரிவித்தான். இங்கு *தான்* என்பது இராமனைக் குறிக்கிறது.

அவன், அவள், அவர், அது, அவை முதலிய பெயர்கள் வேறு பெயர்களை உணர்த்தும். இவை குறிப்புப் பெயர்களாம். இவற்றைச் சுட்டுப் பெயர்கள் என்றும் சொல்வார்கள். ஆங்கிலத்தில் இவை *பிரதிப் பெயர்கள்* (pronouns) என்று சொல்லப்படும்.

இவை வேறு பெயர்களைக் குறிப்பன ஆகையால் குறிப்புப் பெயர்களாம்.

பயிற்சி

குறிப்புப் பெயர்கள் பொருந்தி வருமாறு ஐந்து வாக்கியங்கள் எழுது.

5. வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம்

பின்கண்டவைகளைக் கவனி:

(1) இராமன் முன்னே *வந்தான்*
(2) இராமன் முன்னே *வந்த*
(3) இராமன் முன்னே *வந்து*

இங்குள்ள முதல் உதாரணத்தில் *வந்தான்* என்னும் வினைச்சொல் முடிந்த கருத்தைத் தெரிவிக்கிறது. இரண்டாவது மூன்றாவது உதாரணங்களிலுள்ள *வந்த*, *வந்து* என்னும் வினைச்சொற்கள் முடிந்த கருத்தைப் பெற்றிருக்கவில்லை.

முடிந்த கருத்தைத் தெரிவிக்கும் வினைச்சொல் **வினைமுற்று** என்று சொல்லப்படும்.

முடிவு பெருத நிலையில் உள்ள வினைச்சொல் எச்சவினை எனப்படும்.

"இராமன் முன்னே வந்த" என்னும் சொற்றொடரில் கருத்து முடிவுபெற வேண்டுமானால் அதனோடு

சிறுவன், பையன், வேலைக்காரன் என ஏதாவது ஒரு பெயர்ச்சொல்லைச் சேர்க்கவேண்டும். அதாவது வந்த என்னும் வினை, ஏதாவது ஒரு பெயரைக் கொண்டு முடிவு பெறுவதாக இருக்கிறது.

தெரிந்து கொள்:

பெயரைக்கொண்டு பொருள் முடிவுபெற நிற்கும் வினை **பெயரெச்சம்** எனப்படும்.

(உ–ம்) அது கோயிலில் **கண்ட** யானை
இது **செல்லாத** காசு

இங்கு, *கண்ட, செல்லாத* என்பவை பெயரெச்சங்கள்.

"இராமன் முன்னே வந்து" என்னும் சொற்றொடர் கருத்து முடிவுபெற வேண்டுமானால், அதனோடு *போனான், சேர்ந்தான்,* கண்டான் என்பன போன்ற வினைச்சொற்களுள் ஒன்றைச் சேர்க்கவேண்டும். அதாவது, *வந்து* என்னும் வினை ஏதாவது ஒரு வினைச்சொல்லைக் கொண்டு பொருள் முடிவு பெறுவதாக இருக்கிறது.

தெரிந்துகொள்:

வினைச்சொல்லைக் கொண்டு பொருள் முடிவுபெற நிற்கும் வினை, **வினையெச்சம்** எனப்படும்.

(உ–ம்) வேலன் அங்கே *நின்று* பார்த்தான்.
அவன் காலம் *சென்று* வந்தான்.

இங்கே, நின்று, சென்று என்பன வினையெச்சங்கள்.

பின்கண்டவற்றைப் படித்தறி:

வினைப்பகுதி	வினைமுற்று	பெயரெச்சம்	வினையெச்சம்
செய்	செய்தான்	செய்த	செய்து
	செய்கிறான்	செய்கின்ற	செய்ய
	செய்வான்	செய்யும்	செய்தால்
தா	தந்தான்	தந்த	தந்து
	தருகிறான்	தருகிற	தர
	தருவான்	தரும்	தந்தால்

பயிற்சி

1. பின்கண்ட வினைப்பகுதிகளினின்று வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள் இவற்றை ஆக்குக.
   இரு, போ, நில், பெறு, படி, நட, காண்.

2. மேற்கண்ட வினைப்பகுதிகளினின்று உண்டாக்கிய வினைமுற்றுக்கள், பெயரெச்ச வினையெச்சங்கள் இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

6. காலம்

வினைச்சொற்கள் எல்லாம், காலத்தை உணர்த்தும். காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும். இவற்றை நீங்கள் அறிவீர்கள். இப்போது வினைப் பகுதிகளினின்று முக்கால வினைமுற்றுக்கள் உண்டாகும் விதத்தை அறிந்துகொள்ளுங்கள்.

வினைப்பகுதி	இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
செய்	செய்தேன்	—செய்கிறேன்	—செய்வேன்
	செய்தோம்	—செய்கிறோம்	—செய்வோம்
	செய்தாய்	—செய்கிறாய்	—செய்வாய்
	செய்தீர்கள்	—செய்கிறீர்கள்	—செய்வீர்கள்
	செய்தான்	—செய்கிறான்	—செய்வான்
	செய்தாள்	—செய்கிறாள்	—செய்வாள்
	செய்தார்கள்	—செய்கிறார்கள்	—செய்வார்கள்
	செய்தது	—செய்கிறது	—செய்யும்
	செய்தன	—செய்கின்றன	—செய்யும்

பயிற்சி

மேற்கண்டவாறு பின்கண்ட வினைப் பகுதிகளினின்று முக்கால வினைமுற்றுக்களை உண்டாக்குக.

இரு, போ, வா, நட, நில், விளையாடு, எறி, திரி.

7. திணை

திணை என்பது பிரிவு. இது படைப்புப் பொருள்களைத் தமிழ் இலக்கணத்தார் பிரித்துள்ள பிரிவைக் குறிக்கும். உலகத்துப் பொருள்களை எல்லாம் தமிழ் இலக்கணத்தார் **உயர்திணை**, **அஃறிணை** என்னும் இரு பிரிவுகளில் அடக்கியுள்ளார்கள். உயர்திணையாவது உயர்ந்த பிரிவு; அஃறிணையாவது உயர்ந்தது அல்லாத பிரிவு. அஃறிணை — அல் + திணை; உயர்ந்தது அல்லாத திணை.

மக்களும், தேவரும், நரகரும் உயர்திணையைச் சார்ந்தோர் ஆவர்.

(உ-ம்) கந்தன், கமலம், இந்திரன்.

உயர்திணை அல்லாத மற்றப் பொருள்கள் எல்லாம் அஃறிணையைச் சாரும்.

(உ-ம்) யானை, காக்கை, வண்டு, • கொய்யா, அறுகு

வினைச்சொல்லும் திணையை உணர்த்தும்.

(உ-ம்) கண்டான்—உயர்திணையை உணர்த்திற்று.

தூங்கிற்று—அஃறிணையை உணர்த்திற்று.

பயிற்சி

1. உயர்திணைப் பெயர்கள் பத்துக் கூறு.
2. அஃறிணைப் பெயர்கள் பத்துக் கூறு.
3. உயர்திணை வினைகள் ஐந்து சொல்லு.
4. அஃறிணை வினைகள் ஐந்து சொல்லு.

8. பால்.

பால் என்றால் *பிரிவு* என்பது பொருள். இலக்கணத்தில் இது திணையின் பிரிவைக் குறிக்கும்.

உயர்திணையில் மூன்று பால்கள் உண்டு. அவை யாவன.

ஆண்பால், பெண்பால், பலர்பால் •என்பன.

ஒரு *ஆணைக்* குறிப்பது ஆண்பால் ஆகும்.

(உ-ம்) வேலன், மனிதன், சிறுவன்,

ஒரு *பெண்ணைக்* குறிப்பது பெண்பால் ஆகும்.

(உ-ம்) வள்ளி, இடைச்சி, சிறுமி.

ஆணாயினும் பெண்ணாயினும் *பலரைக்* குறிப்பது பலர்பால் ஆகும்.

(உ-ம்) மக்கள், சிறுவர், சிறுமியர்.

அஃறிணையில் இரண்டு பால்கள் உண்டு. அவை யாவன : ஒன்றன்பால் பலவின்பால் என்பன.

அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

(உ-ம்) மரம், பசு, கிளி, நாய்.

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்.

(உ-ம்) மரங்கள், பசுக்கள், கிளிகள், நாய்கள்.

வினைச் சொற்களும் பாலைக் குறிக்கும்.

(உ-ம்) கண்டான் — இது ஆண்பாலைக் குறித்தது.

நின்றாள் — இது பெண்பாலைக் குறித்தது.
வந்தனர் — இது பலர்பாலைக் குறித்தது.
தின்றது — இது ஒன்றன்பாலைக் குறித்தது.
போயின — இது பலவின்பாலைக் குறித்தது.

பயிற்சி

1. ஐந்து பால்களிலும் வரும் பெயர்ச்சொற்கள் முறையே ஐந்து கூறுக.

2. ஐந்து பால்களிலும் வரும் வினைச் சொற்கள் முறையே ஐந்து கூறுக.

9. எண்

எண் என்பது பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது.

ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை எனப்படும்.

(உ-ம்) வேலன், வள்ளி, ஆடு, காக்கை, மரம்.

பல பொருள்களைக் குறிப்பது பன்மை எனப் படும்.

(உ-ம்) மனிதர், ஆடுகள், காக்கைகள், மரங்கள்.

மேற்குறித்த பால்களில் ஆண்பால், பெண் பால், ஒன்றன்பால் இம் மூன்றும் ஒருமையாம். பலர்பால், பலவின்பால் இரண்டும் பன்மையாம். வினைச் சொற்களும் எண்ணை உணர்த்தும்.

(உ-ம்) வந்தான், சென்றான் — ஒருமையை உணர்த்தின.

வந்தனர், சென்றன—பன்மையை உணர்த்தின.

பயிற்சி

1. ஒருமைப் பெயர்கள் சில கூறு.
2. பன்மைப் பெயர்கள் சில கூறு.
3. ஒருமை வினைமுற்றுக்கள் சில கூறு.
4. பன்மை வினைமுற்றுக்கள் சில கூறு.

10. இடம்

இடமாவது பெயர்வினைச் சொற்கள் பேச்சில் பொருந்தி வரும் இடமாம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

தன்மையாவது பேசுவோன் இடமாம்.

முன்னிலையாவது பேசுவதைக் கேட்க முன்னிற்போன் இடமாகும்.

படர்க்கையாவது தன்மை முன்னிலை இடத்தவர்களால் பேசப்படும் செய்தி படரும் இடமாம். தன்மை முன்னிலை இடம் அல்லாதனவெல்லாம் படர்க்கை இடமாகும்.

(உ-ம்): நான், யான்—*தன்மை ஒருமை;* நாம், யாம், நாங்கள், யாங்கள்—*தன்மைப் பன்மை;* *நீ — முன்னிலை ஒருமை;* நீர், நீயிர், நீவிர், நீங்கள் — *முன்னிலைப்பன்மை.*

தன்மை முன்னிலைகளில் *திணை*, பால் இவை தோன்ரு; எண் மட்டும் தோன்றும். எவ்வாறெனில்: ஒரு ஆணும் தன்னைக் குறித்து நான் என்று கூற லாம். ஒரு பெண்ணும் தன்னைக் குறித்து நான் என்று கூறலாம். ஒரு பறவை தன் வரலாற்றைக் கூறுவதுபோலக் கூறினல், அப்போது அது தன்னைக் குறித்து நான் என்றே கூறவேண்டியிருக்கும்.

இவ்வாறே முன்னிலையிலும் ஒரு ஆணையோ அல்லது ஒரு பெண்ணையோ அல்லது அஃறிணைப் பொருளையோ குறிக்க வேண்டுமானல் நீ என்றுதான் குறிக்க வேண்டும். தன்மை முன்னிலைகளில் பல பொருள்களைக் குறிக்கும்போதும் இவ்வாறே நாம், நாங்கள், நீவிர், நீங்கள் எனக் குறிக்க வேண்டும்.

வினைச்சொற்களிலும் இவ்வாறே தன்மை முன்னிலைகளில் *திணை*பால்கள் தோன்ருமலிருப்பதையும், எண் மட்டும் தோன்றுவதையும் அடியிற் காட்டும் உதாரணங்களாற் காண்க.

(உ-ம்) *சென்றேன்*—இவ்வாறு ஒரு ஆணும் கூறலர்ம்; ஒரு பெண்ணும் கூறலாம்; ஒரு அஃறிணைப் பொருளும் கூறுவதாகக் கூறலாம்.

வந்தோம்—பல ஆண்களும் இவ்வாறு கூறலாம்; பல பெண்களும் இவ்வாறு கூறலாம்; பல அஃறிணைப் பொருள்களும் இவ்வாறு கூறுவதாகக் கூறலாம்.

கண்டாய்—ஒரு ஆணை நோக்கியும் இவ்வாறு கூறலாம்; ஒரு பெண்ணை நோக்கியும் இவ்வாறு கூறலாம்; ஒரு அஃறிணைப் பொருளை நோக்கியும் இவ்வாறு கூறலாம்.

கண்டீர்கள்—பல ஆண்களைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்; பல பெண்களைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்; பல அஃறிணைப் பொருள்களைப் பார்த்தும் இவ்வாறு கூறலாம்.

அவன், அவள், அவர்கள், அது, அவை—இவை எல்லாம் படர்க்கை இடமாகும். மேற்சொன்ன உதாரணங்களிலிருந்து படர்க்கையில் திணை, பால், எண் ஆகிய மூன்றும் தோன்றும் என அறியலாம்.

படர்க்கை வினைச் சொற்களிலும் இவ்வாறே திணை, பால், எண் ஆகிய எல்லாம் தோன்றும்.

சொன்னான் —இது ஆண்பாலைக் குறித்தது.
சொன்னாள் —இது பெண்பாலைக் குறித்தது.
சொன்னார்கள்—இது பலர்பாலைக் குறித்தது.

சொன்னது — இது ஒன்றன்பாலைக் குறித்தது.

சொல்லின — இது பலவின்பாலைக் குறித்தது.

பயிற்சி

1. மூவிடங்களையும் முறையே குறிக்கும் பெயர்வினைச் சொற்கள் பயின்று வருமாறு பத்து வாக்கியங்கள் எழுதுக.
2. தன்மை முன்னிலைகளில் என்னென்ன தோன்று? என்ன தோன்றும்? காரணங் கூறுக?
3. படர்க்கையில் என்னென்ன தோன்றும்? உதாரணங் கூறி விளக்குக?

11. வேற்றுமை

பின் கண்டவைகளைக் கவனி:—

(1) வேலன் கண்டான்.

(2) வேலனைக் கண்டான்.

இங்குக் காட்டியுள்ள முதல் வாக்கியத்தால் வேலன் ஏதோ ஒன்றைக் கண்டான் என்னும் பொருள் ஏற்படுகிறது. இரண்டாவது வாக்கியத்தால் வேலனை யாரோ ஒருவன் கண்டான் என்னும் பொருள் ஏற்படுகிறது. இவ்வாறு பொருள் வேறு படுவதற்கு ஐ என்பது காரணமாக இருத்தல் காண்க.

தெரிந்துகொள் :

பெயரின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். பொருளை வேறுபடுத்துவதற்காக வரும் சொற்கள் **வேற்றுமை உருபுகள்** எனப்படும்.

வேற்றுமை முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

முதல் வேற்றுமை: பெயர்ச்சொல் பயனிலைக்கு எழுவாயாக வரும்போது முதல் வேற்றுமையாகும். இதற்கு உருபு இல்லை.

(உ-ம்) **கண்ணன் கண்டான்.** இங்குக் கண்ணன் என்னும் பெயர், கண்டான் என்னும் பயனிலைக்கு எழுவாயாக வந்ததனால் முதல் வேற்றுமை ஆகும்.

இரண்டாம் வேற்றுமை: இதன் உருபு **ஐ** என்பது. இதன் பொருள் செயப்படுபொருள். அதாவது, இவ்வேற்றுமையை ஏற்ற பெயர் செயப்படுபொருளாக இருக்கும்.

(உ-ம்) **கண்ணனைக் கண்டான்** இங்குக் கண்ணனை என்பது செயப்படுப் பொருள். அதனால் இரண்டாம் வேற்றுமையாகும்.

மூன்றாம் வேற்றுமை: **ஆல், ஆன், ஒடு, ஓடு உடன்** என்பவை இவ்வேற்றுமையின் உருபுகளாம்.

கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்னும் மூன்று பொருள்களில் இவ்வேற்றுமை வரும்.

(உ-ம்) கத்தியால் அறுத்தான் } கருவிப் பொருளில்
கத்தியான் அறுத்தான் } வந்தன.

வேலனால் ஆக்கப்பட்டது } கருத்தாப் பொரு
வேலனன் ஆக்கப்பட்டது } ளில் வந்தன.

கந்தனொடு வந்தான் } உடனிகழ்ச்சிப்
கந்தனோடு வந்தான் } பொருளில்
கந்தனுடன் வந்தான் } வந்தன.

நான்காம் வேற்றுமை: இதன் உருபு கு என்பது. இதற்கு இது என வருதல் இதன் பொருளாம். அதாவது கோடற்பொருள் இதன் பொருளாகும்.

(உ-ம்) பரிசிலர்க்குப் பொன் கொடுத்தான்.
காப்பிற்குப் பொன் கொடுத்தான்.

பரிசிலர்க்கு, காப்பிற்கு என்பன கோடற் பொருளில் வந்தமை அறிக.

ஐந்தாம் வேற்றுமை: இல், இன் என்பவை இதன் உருபுகளாகும். இவற்றோடு முறையே இருந்து, நின்று என்பன சேர்ந்து வரும். நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்பன இதன் பொருளாம்.

(உ-ம்) வீட்டின் நீங்கினன்) —நீங்கற் பொருள்.

இராமனின் கந்தன் பெரியன் } ஒப்புப் பொருள்
இராமனில் கந்தன் பெரியன் }

நாகையின் வடக்குச்
சென்னை—எல்லைப் பொருள்.

கல்வியில் பெரியர்
கம்பர்—எதுப் பொருள்.

மதுரையிலிருந்து வந்தார்—இல் என்பதோடு இருந்து என்பது சேர்ந்து வந்தது.

மதுரையினின்று வந்தார்—இன் என்பதோடு நின்று என்பது சேர்ந்து வந்தது.

ஆறும் வேற்றுமை: அது, உடைய என்பன இதன் உருபுகள். இதன் பொருள் கிழமைப் பொருள். (கிழமை = உரிமை).

(உ—ம்) வேலனது புத்தகம்.
வேலனுடைய புத்தகம்.

இவை கிழமைப் பொருளில் வந்தன காண்க.

ஏழாம் வேற்றுமை: கண், இல், இடத்தில் முதலியன இதன் உருபுகளாகும். இதன் பொருள் இடப்பொருளாம். அதாவது இவ்வேற்றுமையை ஏற்ற சொல், பொருள்களுக்கு இடமாய் நிற்கும்.

(உ—ம்) மனைக்கண் மனைவி இருந்தாள்.
மரத்தில் காக்கை இருந்தது.
அவனிடத்தில் புத்தகம் இருந்தது.

மனைக்கண், மரத்தில், அவனிடத்தில் என்பன இடப்பொருளில் வந்தன காண்க.

எட்டாம் வேற்றுமை: பெயர்களின் ஈற்றில் உண்டாகும் சில மாறுபாடுகள் இதன் உருபாம். இதன் பொருள் விளித்தற் பொருள்; அதாவது அழைத்தற் பொருள். இதனால் இதை விளி வேற்றுமை என்றும் சொல்வார்கள்.

(உ-ம்) தம்பீ வா—இங்கு ஈறு நீண்டது.
அண்ணா, தா—இங்கு ஈற்றெழுத்துப் போய், ஈற்றயலெழுத்து நீண்டது
தங்காய் நில்—இங்கு ஐ என்பது ஆய் எனத் திரிந்தது.

வினைச்சொல்லிற்கு வேற்றுமை கிடையாது. பெயர்ச் சொல்லிற்கு மட்டுமே வேற்றுமை உண்டு.

பயிற்சி

1. பின்கண்ட சொற்களில் எட்டு வேற்றுமைகளையும் முறையே பொருத்திக் காட்டுக:

கமலம், கண்ணன், காக்கை, மரம், வண்டு.

2. பின்கண்ட வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள பெயர்ச்சொற்கள் எவ்வெவ் வேற்றுமையில் எவ்வெப் பொருளில் வந்தனவெனக் கூறுக.

(1) முருகா, நீ எங்கே சென்றிருந்தாய்?
(2) முனியன் தோட்டத்தினின்று காய்கறிகளைக் கொணர்ந்தான்.
(3) தச்சனிடம் மேஜைக்குப் பலகை கொடுக்கப் பட்டது.
(4) இராமனால் வீடு நன்கு கட்டப்பட்டது.
(5) என்னுடைய புத்தகம் கந்தனிடத்தில் இருந்தது.

12. சொல்லிலக்கணம் கூறுதல்

பெயர்ச்சொல்லில் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம். பெயர்ச்சொல் வேற்றுமையை ஏற்று வரும். ஆகையால் பெயர்ச்சொல்லுக்கு இலக்கணம் கூறும்போது, *திணை, பால், எண், இடம், வேற்றுமை* இவைகளைக் குறிப்பிடவேண்டும்.

(உ-ம்) *நீ* எங்குச் சென்றாய் என்று என்னை வேலன் கேட்டான்.

இவ்வாக்கியத்தில் *நீ, என்னை, வேலன்* என்பன பெயர்ச்சொற்கள். இவற்றின் இலக்கணம் பின் வருமாறு:—

நீ—முன்னிலை ஒருமைப்பெயர் முதல் வேற்றுமையை ஏற்றது.

என்னை—தன்மை ஒருமைப்பெயர் இரண்டாம் வேற்றுமையை ஏற்றது.

தன்மை முன்னிலைகளில் திணை, பால்கள் தோன்றா. ஆகையால் அவை கூறப்படவில்லை.

வேலன்—ஆண்பாற் பெயர் முதல் வேற்றுமையை ஏற்றது. பால் கூறவே திணை, பால், எண், இடம் ஆகியவை கூறியவாறாயிற்று.

வினைமுற்றில் திணை, பால், எண், இடம் இவற்றை அறியலாம். வினைமுற்று காலத்தை ஏற்று வரும். ஆகையால் வினைமுற்றுக்கு இலக்கணம்

கூறும்போது, திணை, பால், எண், இடம், காலம் இவற்றைக் குறிப்பிட வேண்டும்.

(உ-ம்) 1. நாங்கள் வீடு திரும்பினோம்.
2. நீ என்ன செய்கிறாய்?
3. அரசன் கோயிலைக் கட்டுவான்.

இங்குக் காட்டிய உதாரணங்களில் திரும்பினோம், செய்கிறாய், கட்டுவான் என்பன வினை முற்றுக்கள். இவற்றின் இலக்கணம் பின்வருமாறு:

1. திரும்பினோம்—தன்மைப் பன்மை இறந்த கால வினைமுற்று.

2. செய்கிறாய்—முன்னிலை ஒருமை நிகழ்கால வினைமுற்று. தன்மை முன்னிலைகளில் திணைபால்கள் தோன்றா; ஆதலால் அவை கூறப்படவில்லை.

3. கட்டுவான்—ஆண்பால் எதிர்கால வினை முற்று. பால் கூறவே, திணை, பால், எண், இடம் ஆகியவற்றைக் கூறியவாறாயிற்று.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களில் தடித்த சொற்களுக்கு இலக்கணம் கூறுக.

1. **நாளை நான் வருவேன்.**
2. வேலா, நீ அங்கே **வா**.
3. பார்வதி தினமும் பள்ளிக்குப் **போகிறாள்**.
4. மாடத்தில் விளக்கு **இருந்தது**.
5. மரத்தில் உள்ள பழங்களைக் கல்லால் **அடித்தான்**.

13. சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடும் விதத்தைப்பற்றிச் சென்ற வகுப்பில் சிறிது அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அதைப்பற்றிச் சிறிது தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரே சொல்லும் சில சமயங்களில் பொருளில் நுட்பமாக வேறுபடுவது உண்டு.

(உ-ம்) 1. அவன் சாலையில் நடந்தான்
2. அவன் பேசாமல் நடந்தான்.
3. அவன் நல்வழியில் நடந்தான்

மேற்கண்ட உதாரணங்களில் நடந்தான் என்னும்சொல் பொருளில் நுட்பமாக வேறுபடுகிறது. எங்ஙனமெனில், முதல் வாக்கியத்தில் நடந்தான் என்பது காலால் நடப்பதைக் குறித்தது.

இரண்டாம் வாக்கியத்தில் நடந்தான் என்பது கோபத்துடனோ அல்லது விசனத்துடனோ சென்றான் என்று பொருள்படுகிறது.

மூன்றும் வாக்கியத்தில் நடந்தான் என்பது கடைப்பிடித்தான் எனப் பொருள்படுகிறது.

இனி மற்றொரு உதாரணம் கூறுவோம்.

(உ-ம்) 1. குமரன் மரத்தைக் கண்டான்.
2. குமரன் நாடு கண்டான்.
3. குமரன் பொருள் கண்டான்.
4. குமரன் உரை கண்டான்.

மேற்கண்ட வாக்கியங்களில் கண்டான் என்னும் சொல் பொருளில் பலவகையாக வேறுபடுகிறது. எங்ஙனமெனில், முதல் வாக்கியத்தில் கண்டான் என்பது பார்த்தான் எனப் பொருள்படுகிறது.

இரண்டாம் வாக்கியத்தில் கண்டான் என்பது சுற்றிப்பார்த்தான் எனப் பொருள் படுகிறது.

மூன்றும் வாக்கியத்தில் கண்டான் என்பது ஆராய்ந்து கண்டறிந்தான் எனப் பொருள் படுகிறது.

நான்காம் வாக்கியத்தில் கண்டான் என்பது இயற்றினன் எனப் பொருள்படுகிறது.

பயிற்சி

மேற்கண்டவற்றைப் போல் நீங்கள் சில உதாரணங்களைக் கூறுங்கள்.

IV. புணர்ச்சி

1. எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி

எண்ணுப் பெயர்கள் தம்மோடு தாம் புணரும் போதும், பிற பெயர்களோடு புணரும்போதும் பல வகையான மாறுபாடுகளை அடைகின்றன. அவற்றைப்பற்றி இப்போது தெரிந்து கொள்வோம்.

பின்கண்டவற்றைக் கவனி:

(உ-ம்) ஒன்று + ஆயிரம் = ஓராயிரம்
ஒன்று + ஆடு = ஓராடு
இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்
இரண்டு + ஆடு = ஈராடு

இவை எப்படி புணர்ந்தன? ஒன்று, இரண்டு என்னும் எண்ணுப் பெயர்களின் இறுதியில் உள்ள எழுத்துக்கள் கெட்டன. முதலெழுத்து நீண்டது. வருமொழி முதலில் உயிர் வந்தால் இவை இப்படி புணரும்.

(உ-ம்) மூன்று + ஆயிரம் = மூவாயிரம்
மூன்று + ஆடு = மூவாடு
நான்கு + ஆயிரம் = நான்காயிரம்
நான்கு + ஆடு = நாலாடு
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்
ஐந்து + ஆடு = ஐயாடு

மேற்கண்ட உதாரணங்களில் மூன்று, நான்கு, ஐந்து என்னும் எண்களின் ஈறு கெட்டன. நான்கு என்பதிலுள்ள னகரம் லகரமாயிற்று.

(உ-ம்) ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்
ஆறு + ஆடு = ஆறாடு
ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்
ஏழு + ஆடு = ஏழாடு

இவற்றில் ஆறு, ஏழு என்பனவற்றின் ஈற்றி லுள்ள உகரம் கெட்டது.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம்
எட்டு + ஆடு = எட்டாடு

இங்கு முதல் உதாரணத்தில் நிலைமொழி ஈறு கெட்டு டகரம் ணகரமாகத் திரிந்தது; இரண்டாவது உதாரணத்தில் ஈற்று உகரம் கெட்டது.

(உ-ம்) ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்
ஒன்பது + ஆடு = ஒன்பதாடு
பத்து + ஆயிரம் = பதினாயிரம்
பத்து + ஆடு = பத்தாடு

ஒன்பது என்பது ஆயிரம் என்பதோடு புணரும் போது இன் என்பதைப் பெற்றது; ஆடு என்பதோடு புணரும்போது இன் பெறவில்லை. பத்து என்பது ஆயிரத்தோடு புணரும்போது ஈறுகெட்டு இன் என்பதைப் பெற்றது; ஆடு என்பதோடு புணரும் போது ஈற்று உகரம் கெட்டது.

இனிப் பல்வேறு எண்களும் பல்வேறு சொற் களோடு புணரும் விதத்தை அடியிற் காண்க:

(உ-ம்) ஒன்று + பொருள் = ஒரு பொருள்
இரண்டு + பொருள் = இரு பொருள்

மூன்று	+	பழம்	=	முப்பழம்
நான்கு	+	பணம்	=	நாற்பணம்
ஐந்து	+	பொருள்	=	ஐம்பொருள்
ஆறு	+	வகை	=	அறுவகை
ஏழு	+	வகை	=	எழுவகை
எட்டு	+	பொருள்	=	எண்பொருள்
ஒன்பது	+	வகை	=	ஒன்பதுவகை
பத்து	+	பொருள்	=	பத்துப் பொருள்

இவை பல வகையாகப் புணர்ந்தன.

பின்வரும் உதாரணங்களில் வருமொழியாகிய *பத்து* என்பதன் இடையில் உள்ள தகரம் கெடுவது காண்க:

(உ-ம்)

ஒன்று	+	பத்து	=	ஒருபது
இரண்டு	+	பத்து	=	இருபது
மூன்று	+	பத்து	=	முப்பது
நான்கு	+	பத்து	=	நாற்பது
ஐந்து	+	பத்து	=	ஐம்பது
ஆறு	+	பத்து	=	அறுபது
ஏழு	+	பத்து	=	எழுபது
எட்டு	+	பத்து	=	எண்பது

ஒன்பது என்பது *பத்து*, *நூறு* இவற்றோடு சேரும்போது விநோத மாறுபாட்டை அடைகிறது.

(உ-ம்) ஒன்பது + பத்து = தொன்பது + நூறு = தொள் + நூறு = தொண்ணூறு.

ஒன்பது + நூறு = தொன்பது + ஆயிரம் = தொள் + ஆயிரம் = தொளாயிரம்.

பின்கண்ட புணர்ச்சியில் இன் வருவது காண்க.

(உ-ம்) பத்து + ஒன்று = பதினொன்று
பத்து + இரண்டு = பன்னிரண்டு

இவ்வாறு எட்டு வரையில் வரும். பிறகு,

(உ-ம்) பத்து + ஒன்பது = பத்தொன்பது

என ஒன்பதோடு சேரும். மேலும் சில உதாரணங்களில் வேறு விகாரங்கள் அடைவது காண்க.

(உ-ம்)
ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று
இரண்டு + இரண்டு = இவ்விரண்டு
மூன்று + மூன்று = மும்மூன்று
நான்கு + நான்கு = நந்நான்கு
ஐந்து + ஐந்து = ஐவைந்து
ஆறு + ஆறு = அவ்வாறு
ஏழு + ஏழு = எவ்வேழு
எட்டு + எட்டு = எவ்வெட்டு
பத்து + பத்து = பப்பத்து

2, உயிர் முன் உயிர் புணர்தல்

உடம்படு மெய் பெறுதல்

பின் கண்டவற்றைக் கவனி:

மணி + அடி = மணியடி
தேனீ + இருந்தது = தேனீயிருந்தது
பனை + ஓலை = பனையோலை

நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ, என்னும் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிர்வந்து

புணர்ந்தால், இடையில் யகர உடம்படுமெய் தோன்றும்.

வேலனே + எழுந்தான் = வேலனே யெழுந்தான்

தே + ஆரம் = தேவாரம்

சே + அடி = சேயடி(சேவடி)

நிலைமொழி ஈற்றில் ஏகாரம் இருக்க, வருமொழி முதலில் உயிர் வந்து புணருமானல், யகர வுடம்படு மெய்யேனும், வகர வுடம்படு மெய்யேனும் வரும்.

பல + ஏணி = பலவேணி

பலா + இலை = பலாவிலை

நடு + இடம் = நடுவிடம்

பூ + எடு = பூவெடு

கோ + இல் = கோவில்

நிலைமொழி ஈற்றில் அ, ஆ, உ, ஊ, ஓ, ஒ, ஔ, ென்னும் உயிர் எழுத்துக்கள் இருக்க, வருமொழி முதலில் உயிர் வந்து புணர்ந்தால், வகர வுடம்படு மெய் வரும்.

3. வல்லெழுத்து மிகும் இடங்கள்

வாழை + காய் = வாழைக்காய்

பலா + சுளை = பலாச்சுளை.

குடி + கூலி = குடிக்கூலி

நிலைமொழி ஈற்றில் உயிரெழுத்து இருக்க, வருமொழி முதலில் வல்லினம் வந்து புணர்ந்தால் இடையில் வல்லினம் மிகும்.

படத்தை + பார் = படத்தைப் பார்

எனக்கு + கொடு = எனக்குக் கொடு

ஐ, கு என்னும் வேற்றுமை உருபுகளுக்கு முன் வரும் வல்லினம் மிகும்.

படிக்க + சென்றான் = படிக்கச்சென்றான்
ஓடி + போனான் = ஓடிப்போனான்
போய் + சேர்ந்தான் = போய்ச்சேர்ந்தான்

அ, இ, ய் என முடியும் வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

4. மகர ஈறு

மகர ஈற்றின் முன் வல்லினம்

பணம் + பெட்டி = பணப்பெட்டி
குணம் + குன்று = குணக்குன்று

மகர ஈற்றின்முன் வல்லினம் வரச் சில இடங்களில் மகரம் கெட்டு வல்லினம் மிகும்.

மகர ஈற்றின் முன் மெல்லினம்

மரம் + நார் = மரநார்
மரம் + முறிந்தது = மரமுறிந்தது

மகர ஈற்றின் முன் மெல்லினம் வர, மகரம் கெட்டது.

மகர ஈற்றின் முன் இடையினம்

மரம் + வேர் = மரவேர்
நிலம் + வரி = நிலவரி

மகர ஈற்றின்முன் இடையினம் வர, மகரம் கெட்டது.

பயிற்சி

1. பின் வரும் எண்ணுப் பெயர்களைச் சேர்க்க.

ஒன்று + நூறு		எட்டு + எட்டு	
பத்து + ஏழு		ஒன்று + ஆறு	
நூறு + ஆயிரம்		ஐந்து + ஆடு	
பத்து + பத்து		ஆறு + பொருள்	
ஐந்து + நூறு		ஏழு + கடல்	
ஒன்பது + பத்து		பத்து + ஆயிரம்	
ஒன்பது + நூறு		எட்டு + வகை	

2. பின் வரும் சொற்களைச் சேர்த்து இவை எவ்வாறு புணர்ந்தன எனக் கூறுக.

கோ + இல்	எதை + கண்டான்
இலை + எடு	உனக்கு + கொடுத்தான்
தே + ஆரம்	போய் + கண்டான்
பணம் + பை	தேடி + திரிந்தான்
பலா + பழம்	எரிக்க + பார்த்தான்
மரம் + வேர்	மனம் + மாறியது

V. அணி

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். இங்கு அணி செய்யுளிலும் உரை நடையிலும் வழங்கி வரும் அழகைக் குறிக்கிறது.

பின்வருவனவற்றைக் கவனி:

(1) அந்த ஆடை வெண்மையானது.
(2) அந்த ஆடை பால்போல வெண்மையானது.

இங்கு முதல் வாக்கியத்தைவிட, இரண்டாவது வாக்கியம் அழகாக அமைந்திருப்பது காண்க.

அணிகளில் பலவகை உண்டு. அவற்றுள் இங்கு உவமை, உருவகம் என்னும் இரண்டைப்பற்றிக் கூறுவோம்.

1. உவமை அணி

(1) அவனது முகம் தாமரை போல மலர்ந்தது.
(2) அவளது கண்கள் கோவைப்பழம் போலச் சிவந்தன.

மேற்கண்ட உதாரணங்களில் இதுபோல இது இருந்தது எனக் கூறப்படுகிறது அல்லவா? இப்படி அமைந்து வருவதுதான் உவமை அணி.

மேற்கண்ட முதல் உதாரணத்தில் முகம் என்னும் பொருள் இப்படி இருந்தது என விளக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் அப்படி விளக்கப்படும் பொருள் கண்கள்.

உவமை அணியில் விளக்கப்படும் பொருள் உவமேயம் எனப்படும்.

உவமேயத்தை விளக்குவதற்காக வரும் பொருள் உவமானம் எனப்படும்.

மேற்கண்ட உதாரணங்களுள் தாமரை, கோவைப் பழம் ஆகியவை உவமானம்.

முகம், கண்கள் இவை உவமேயம்.

உவமையணியில் உவமானத்தால் உவமேயத்தை விளக்குவதற்காகப் போல என்பது வந்துள்ளது. இது உவம உருபு எனப்படும்.

போல, புரைய, ஒப்ப, உறழ, மான, நேர, நிகர, அன்ன முதலியவை உவம உருபுகளாக வரும்.

உவமேயத்தை உவமானத்தால் விளக்குவதற்கு அவ்விரண்டிற்கும் இடையில் ஒரு பொதுத் தன்மை இருக்கவேண்டும். மேற்கண்ட முதல் உதாரணத்தில் மலர்ந்திருந்தல் பொதுத்தன்மை; இரண்டாவது உதாரணத்தில் சிவந்தல் பொதுத்தன்மை. ஆகவே உவமையணியில் உவமானம், உவமேயம், உவமவுருபு, பொதுத்தன்மை என நான்கு உறுப்புக்கள் உண்டு.

பயிற்சி

1. பின் கண்ட உவமைகளில் உவமவுறுப்புக்கள் நான்கையும் தனித்தனி அட்டவணையிட்டு எடுத்தெழுது:—

(1) வேடன் புலிபோல பாய்ந்தான்.

(2) குதிரை காற்றென வேகமாய் ஓடிற்று.

(3) அவன் காக்கையைப்போலக் கறுப்பாய் இருந்தான்.
(4) வள்ளி தேன் ஒப்ப இனிமையாய்ப் பாடினாள்.
(5) நிலவு பால்போல வெண்மையாய் எறித்தது.

அட்டவணை

வாக்கியத்தின் எண்	உவமானம்	உவமேயம்	உவம உருபு	பொதுத் தன்மை

2. உருவக அணி

1. அவன் அவரது தாமரை போன்ற பாதங்களை வணங்கினான்.

2. அவன் அவரது பாதத் தாமரைகளை வணங்கினான்.

இங்கு முதல் வாக்கியத்தில் பாதங்கள் தாமரை போல இருந்தன என்பது பொருளாகிறது. இரண்டாவது வாக்கியத்தில் பாதங்கள் தாமரையாகவே கூறப்பட்டுவிட்டன. இவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள அணி, உவமை அணி என்பதை நீங்கள் அறிவீர்கள். அதில் உவமானம், உவமேயம் இரண்டும் வேறு வேருகக் குறிக்கப்படுகின்றன. இங்கு இரண்டாவது வாக்கியத்தில் உவமானத்தின் தன்மையை உவமேயத்தின் மேல் ஏற்றி இரண்டையும் ஒன்ருகக் கூறப்பட்டுள்ளது.

அதாவது உவமேயத்தையே உவமானப் பொருளாக ஆக்கியிருக்கிறது. இவ்வாறு வருவது **உருவக அணி** என்று சொல்லப்படும்.

உவமை அணிக்கும் உருவக அணிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் பின்வரும் உதாரணங்களால் அறிக.

மதிபோன்ற முகம் அல்லது மதிமுகம் } — முகமதி

பவளம் போன்ற வாய் அல்லது பவளவாய் } — வாய்ப்பவளம்

இவையன்றி, பாவை போன்றவளைப் *பாவை* என்று கூறுவதும், *சிங்கம்* போன்றவனைச் **சிங்கம்** என்று கூறுவதும் உருவக அணியே:

பயிற்சி

1. உருவக அணிக்குச் சில உதாரணங்கள் சொல்லு.
2. உவமை அணிக்கும் அதற்கும் உள்ள வேறுபாடு யாது?
3. பின்வரும் உவமையை உருவகம் ஆக்குக.
   (1) குவளை போன்ற கண்கள்
   (2) பொன் போன்ற மேனி.
4. பின்வரும் உருவகத்தை உவமையணியாகக் கூறு.
   (1) பாத கமலம்
   (2) குணக்குன்று.

VI. நிறுத்தற் குறிகள்

சென்ற வகுப்பில் நீங்கள் காற்புள்ளி, அரைப் புள்ளி, முக்காற் புள்ளி, முற்றுப் புள்ளி, வினக்குறி, வியப்புக்குறி, என்பவைகளைப் பற்றி அறிந்தீர்கள். இவ்வகுப்பில் மேற்கோள் குறிகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

சொற்றொடரின் முன்னும் பின்னுமாக முறையே "*தினமணி*" இவ்வாறு மேற்கோட்குறிகள் இடப் படும். மற்று, '*தினமணி*' இப்படியுங்கூட இது இடப் படுவது உண்டு. இக்குறி எவ்வெச் சந்தர்ப்பங்களில் இடுவர் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

கண்ணன் தன் அண்ணனைப் பார்த்து, "நீ என்னைக் கடைக்குக் கூட்டிச்செல்" என்றான்.

மேற்கண்டவாறு ஒருவன் கூறியதை அப்படியே குறிப்பிடும் இடங்களில் இக் குறிகள் இடப்படும்.

அவன் "திருவள்ளுவர்"ப் படித்தான்.

இவ்வாறு பிரசித்தமான ஒன்றைக் குறிப்பிடும் போதும் இக்குறி இடப்படும்.

தாய் தன் மகனை அன்பாகக் "கண்ணே" என்று அழைத்தாள்.

இவ்வாறு ஒன்றைச் சிறப்பாக எடுத்துச் சொல்லும்போதும் இக்குறி இடுவது உண்டு.

பொருளின் பெயரை உணர்த்துவது "பொருட் பெயர்".

இவ்வாறு வாக்கியத்தில் முக்கியமான சொல்லைக் குறிப்பதற்கும் இக்குறி இடுவது உண்டு.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களில் தக்க இடங்களில் மேற்கோட் குறிகளை இடுக.

1. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும் அறிவிலிகளே. கேளுங்கள்: நீங்கள் அவ்வாறு செய்யக்கூடாது என்று நல்வழியில் கூறப்பட்டுள்ளது.

2. வேலன் தந்தை அவனை நோக்கி, நீ இவ்வாறெல்லாம் தவறு செய்தால் நான் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பேன்' என்றார்.

3. ஆலும் வேலும் பல்லுக் குறுதி என்பது ஒரு பழமொழி'

4. நீ நாலடியார் வாசித்தாயா?

5. தினமும் சுதேசமித்திரன் படிப்பது என் வழக்கம்;

பயிற்சி வினாக்கள்

1. கொடுந்தமிழ்ச் சொற்கள் சில கூறி அதற்கு இணையான செந்தமிழ்ச் சொற்களையும் எடுத்து எழுதுக.

2. பின்வரும் கொடுந்தமிழ்ச் சொற்களுக்கு இணையான செந்தமிழ்ச் சொற்கள் எவை?

அச்சன், வெள்ளம், இகுளை, செய், பாழி

3. பின்வரும் வினைமுற்றுக்களில் பகுதி, விகுதி இடைநிலை இவற்றை எடுத்துக் காட்டுக;

செய்தான், நின்றேன், பார்த்தோம், வாரா நின்றான், படிக்கிறான், செய்கிறீர், வருவீர்கள், தருவாய்,

4. பின்வரும் வழுஉச் சொற்றொடர்களைத் திருத்திக் கூறுக.

காக்கைக்குட்டி, குதிரைக் குஞ்சு, நரி பிளிறுகிறது. யானை கரைகிறது. கோழி கத்துகிறது. பசுக்கள் வந்தது. அவன் சொன்னாள்.

5 பால் இட வழுவமைதிக்கு முறையே ஒவ்வொரு உதாரணம் கொடுக்க.

6. கீழ் வரும் வாக்கியங்களிலுள்ள வினைமுற்று. பெயரெச்சம், வினையெச்சம் இவற்றைத் தனியே எடுத்து எழுதுக:

(1) கமலம் பாட்டுப்பாடி முடித்தாள்.

(2) அன்று வந்த சிறுவன் இதோ வருகிறான்.

(3) நாய் மிக விரைவாய் ஓடி அவனைக் கடித்தது.

(4) படித்த பையன் தேர்வில் தேறுவான்.

(5) கண்ணன் துரத்திச் சென்று அந்த மாட்டைப் பிடித்தான்.

7. பின் வரும் வினைமுற்றுக்கள் இன்னகால வினைமுற்றுக்கள் எனக் கூறு.

கண்டான், தருகின்றேன், நின்றாய், உண்ணுகின்றான், படிப்பாள், அறிந்தேன்.

8. பின்வரும் சொற்களில் எட்டு வேற்றுமைகளையும் பொருத்திக் காட்டுக.

கந்தன், சீதை, மான், காக்கை, அரசன், தம்பி,

9. பின் வரும் வாக்கியங்களிலுள்ள பெயர் வினைச்சொற்களுக்குச் சொல்லிலக்கணம் கூறுக.

(1) நீ எங்கே அவனைக் கண்டாய்?

(2) நான் நேற்று ஊரிலிருந்து வந்தேன்.

(3) மரத்தில் பழங்கள் நிறையப் பழுத்திருக்கின்றன.

(4) கண்ணனது பலகையைக் கமலம் வைத்திருக்கிருள்.

(5) அவனுக்கு உனது பலகையைக் கொடுத்தாயா?

10. கீழ்வருவனவற்றை ஒன்று சேர்:

ஒன்று+பலகை; இரண்டு+ஆயிரம்; பத்து+பத்து; ஒன்பது+நூறு; ஆறு+ஆறு; எட்டு+சாண்; அவனே + அடித்தான்; சே + அடி; கோ + இல்; தே+ஆரம்; நிற்க+மாண்டான்; பேரிய+பார்த்தான்; மனம்+மாற்றம்.

11. கீழ்வருவனவற்றைப் பிரித்துக் கூறு:

நந்நான்கு; ஐயாயிரம், பணத்தட்டு; மணப்பந்தல். மணவோலை, சேயடி, ஓடிப்போனுன், பாத்திரக்கடை.

12. உவம உருவக அணிகளை உதாரணங்களுடன் விளக்கு.

13. பின்வரும் வாக்கியங்களிலுள்ள உவம உருவக அணிகளை எடுத்துக் காட்டு.

(1) அவன் வயிறு வீணுன் தாழிபோல இருந்தது.

(2) • துறவியினது பாதத்தாமரைகளை முருகன் வணங்கினான்.

(3) அவனது மதிமுகம் வியர்த்தது.

(4) குணக்குன்ருகிய அவனை எல்லாரும் போற்றினர்.

14. மேற்கோட் குறிகள் எவ்வெவ்விடங்களில் இடப்படும்? உதாரணத்துடன் விளக்குக.

15. பின்கண்ட வாக்கியங்களில் உரிய இடங்களில் மேற்கோட் குறிகளை இடுக:

(1) நாளை யாவரும் கொடிவணக்கம் செய்ய வேண்டும் என்பது அரசாங்கக் கட்டளை:

(2) நன்னூல் தமிழ்கற்பார்க்குரிய இலக்கணம் ஆகும்.

(3) விரைந்து ஓடி வா என்று அவன் தன் தங்கைக்குக் கூறினான்.

(4) தன் குடிக்கு விளக்கினைப் போன்றவன் அவன்.

(5) இறைவனே என்னை ஆட்கொண்டருள்க என்று அந்தப் பெரியார் கூறினார்.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்

செந்தமிழ் இலக்கணம்

மூன்றும் படிவம் — சிறப்புப்பகுதி.

★

வித்துவான், V. நரசிம்மன், M. A.
வித்துவான், C. இராமசாமி
தமிழ் ஆசிரியர்-கழக உயர்நிலைப்பள்ளி, வத்தலகுண்டு.

★

ஜெனரல் புக் கம்பெனி
கும்பகோணம்

பதிப்புரிமை] 1955 [விலை ரூ. 0—8—0

முதற் பதிப்பு — 1954
இரண்டாம் பதிப்பு — 1955

Approved by the Text Book Committee—Madras for class use.
Vide page 26 dated 4—5—55

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்

முன்னுரை

செந்தமிழ் இலக்கணம் என்னும் இச்சிறுநூல் அண்மையில் (அதாவது 28—8—51 தேதியில்) அரசியலார் வெளியிட்ட முதல் மூன்று படிவங்கட்குரிய பாடத்திட்டத்தை அடியொற்றி அப்படிவங்களின் சிறப்புப்பகுதி மாணவர்க்குப் பயன்படுமாறு இயற்றப்பெற்றுள்ளது.

இந்நூல் எடுத்துக்காட்டுக்களினின்று விதியை வருவித்துரைக்கும் இண்டக்டிவ் மெதட் (inductive method) என்னும் போதனை முறைக்கிணங்க இயன்றது. ஆங்காங்குப் புதிய முறையில் பயிற்சிகள் பல கொடுக்கப்பட்டுள்ளன. அவை மாணவர்க்கு இலக்கணத்தில் சிறந்த தேர்ச்சியை உண்டாக்குவனவாம். இதில் கூறப்படும் உதாரணங்கள் மாணவர் அறிவுக்கெட்டியவைகளேயாம்.

மாணவர், இலக்கணத்தை விரும்பிக் கற்கும் வகையில் புத்தகம் அமையவேண்டும் என்னும் நோக்கத்தோடு இப்புத்தகம் இயற்றப்பட்டிருப்பதால் மாணவர்க்குப் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறோம்.

கல்வித்துறை வல்லார் இதனை ஆதரித்து எங்களுக்கு ஊக்கமளிப்பாராக.

ஆக்கியோர்கள்

பொருளடக்கம்

எண்	பொருள்	பக்கம்
I.	எழுத்து:	
(1)	உயிர்ப்பு எழுத்துக்கள்	1
(2)	ஒலிப்பு எழுத்துக்கள்	1
(3)	மூக்கின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்	1
(4)	வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்	2
(5)	அலகு பிரித்துச் சொல்லுதல்	2
(6)	எழுத்தின் ஒலி, சொல்லில் இடத்திற்கேற்ப மாறுதல்	3
II.	சொல்:	
(1)	சுட்டு, வினா	7
(2)	இடுகுறிப் பெயர், காரணப் பெயர்	8
(3)	வழூஉச் சொல்லும், திருத்தமும்	10
(4)	ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்	11
(5)	கால இடை நிலைகள் ...	13
(6)	இடைச்சொல்	14
(7)	உரிச்சொல்	16
(8)	சாரியைகள்	18
(9)	ஆகுபெயர்	19
(10)	வெளிப்படைக் குறிப்பு	21
(11)	இயல்பு வழக்கு	22
(12)	தகுதி வழக்கு	24
III.	தொடராக்கம்:	
(1)	தொகைநிலைத் தொடர்கள்	26
(2)	தொகாநிலைத் தொடர்கள்	29

IV. புணர்ச்சி:

(1) உயிர்முன் வல்லினம்—(மிகும் இடங்கள், மிகா இடங்கள்) 31
(2) மெய்ம்முன் உயிர் — (லகர ளகர ஈறு) 32
(3) மெய்ம்முன் மெய் — (லகர ளகர ஈறு) 33
(4) மெய்ம்முன் மெய் — (னகர ணகர ஈறு) 34
(5) மெய்ம்முன் மெய் — (மகர ஈறு) 35
(6) சில விசேடப் புணர்ச்சிகள் 35

V. அணிகள்:

(1) தற்குறிப்பேற்ற அணி 37
(2) தன்மை நவிற்சியணி 38
(3) உயர்வு நவிற்சியணி 38
(4) முரண் தொடை அணி 39

VI. நிறுத்தற் குறிகள்:

(1) கோடு இடுதல் 40
(2) இடைப்பிற வைப்புக் குறிகள் 40
(3) பிறைக குறிகள் 41

பயிற்சி வினாக்கள் 42

செந்தமிழ் இலக்கணம்

மூன்றாம் படிவம்.

I. எழுத்து

1. உயிர்ப்பு எழுத்துக்கள்
(Breathed Sounds)

க், ச், ட், த், ப் என்னும் ஐந்து எழுத்துக்களையும் உச்சரித்துப் பாருங்கள். இந்த எழுத்துக்கள் உயிர்த்தல் மாத்திரத்திலேயே அதாவது ஒலி பிறர் காதுக்குக் கேளாத நிலையிலேயே உச்சரிக்கக் கூடியவைகளாக இருத்தலை அறியலாம். அதனால் இந்த எழுத்துக்கள் **உயிர்ப்பு எழுத்துக்கள்** எனப்படும்.

2. ஒலிப்பு எழுத்துக்கள்
(Voiced Sounds)

மேற்கண்ட ஐந்து வல்லின மெய்களைத் தவிர மற்ற எழுத்துக்கள் எல்லாம் பிறர் காதுக்குக் கேட்குமாறு ஒலித்து உச்சரிக்கும் எழுத்துக்கள் ஆகும். ஆகையால் அவையெல்லாம் **ஒலிப்பு எழுத்துக்கள்** எனப்படும்.

3. மூக்கின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறு மெல்லின மெய்யெழுத்துக்களும், மற்றும் இம்மெய்கள் உயிர்

களோடு கூடுவதால் உண்டாகும் 72 மெல்லின உயிர் மெய்யெழுத்துக்களும் மூக்கை இடமாகக் கொண்டு உச்சரிக்கப்படும் எழுத்துக்களாம்.

4. வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்கள்

மேலே மூக்கின் வழியாக உச்சரிக்கும் எழுத்துக்களாகக் கூறப்பட்டவை நீங்கலாக மற்ற எழுத்துக்கள் எல்லாம் வாயின் வழியாக ஒலிக்கும் எழுத்துக்களாம்.

5. அலகு பிரித்துச் சொல்லுதல்

அலகு பிரித்துச் சொல்லுதலாவது, சொற்களைப் பல அசைகளாகப் பிரித்துச் சொல்லுதலாம். சொற்கள் ஒலிக்கும் விதத்தைக் கவனித்து அதற்குத் தக்கபடி அலகு பிரிக்கவேண்டும். உதாரணமாக, வண்டு என்னும் சொல்லை அலகு பிரித்துச் சொல்லவேண்டுமானால் வண், டு எனப் பிரிக்கவேண்டுமேயல்லாமல், வ, ண், டு, என்றாவது வ, ண்டு என்றாவது பிரித்துச் சொல்லக்கூடாது.

சொற்களைப் பிரித்து முதல் வரியின் இறுதியிலும் அடுத்த வரியின் முதலிலும் எழுத நேரிட்டாலும் மேற்கண்டவாறு அலகு பிரித்தே எழுதவேண்டும். உதாரணமாக வண்டு என்பதில் வண் என்பதை முதல் வரியின் இறுதியிலும், டு என்பதை அடுத்த வரியின் முதலிலும் எழுதவேண்டும்.

அடியிற் சில சொற்கள் அலகு பிரித்து எழுதப் பட்டிருப்பதைப் பாருங்கள். அப்படியே நீங்கள்

மற்றும் எல்லாச் சொற்களையும் அலகு பிரித்து எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்.

சொல்		அலகு பிரித்து எழுதும் விதம்
தீபம்	—	தீ, பம்
பழம்	—	பழம்
கறுப்பு	—	கறுப், பு
கண்டான்	—	கண், டான்
விழுந்தனர்	—	விழுந், தனர்
போகிறான்	—	போ, கிறான்
நடந்துகொண்டிருந்தனர்	—	நடந், துகொண், டிருந், தனர்

6. எழுத்தின் ஒலி, சொல்லில் இடத்துக்கேற்ப மாறுதல்

தமிழ் எழுத்துக்களில் சில, அவை சொற்களில் பொருந்திவரும் இடத்திற் கேற்றவாறு ஒலி வேறுபாடுகளை அடைகின்றன. அவற்றைப்பற்றி இப்போது தெரிந்துகொள்வோம்.

கப்பல்—இதில் சொல்லின் முதலில் க என்னும் வல்லினமெய் வல்லோசையை நன்கு பெற்றிருக்கிறது.

அகம்-இங்குச் சொல்லின் இடையில் க என்னும் வல்லினமெய் வல்லோசை குறைந்து வருகிறது.

தங்கம்—இங்கு மெல்லின மெய்யை அடுத்து வந்த க என்னும் வல்லினமெய் வல்லோசை மிகவும் குறையப்பெற்று மெல்லோசை பொருந்தி வருகிறது.

பக்கம்—இங்கு இரட்டித்து வந்த ககரமாகிய வல்லினமெய் வல்லோசை நன்கு பொருந்தப்பெற்று வருகிறது.

மேற்கண்டவற்ருல் வல்லின மெய்கள் சொற்களின் முதலிலும், இரட்டித்து வரும்போதும் வல்லோசையை நன்கு பொருந்தி வரும். சொற்களின் இடையில் தனித்து வரும்போது வல்லோசை சிறிது குறையப்பெறும். மெல்லினத்தை அடுத்து வரும்போது வல்லோசை நன்கு குறையப்பெற்று மெல்லோசை பொருந்தி வரும். சகரம் மொழிக்கு முதலிலும் வல்லோசை குறையும். அடியிற்கண்ட வேறு உதாரணங்களாலும் மேற்கண்ட செய்தியை அறிக.

(உ-ம்) கத்தி, பகல், பொங்கல், சுக்கு.
சட்டி, பசு, அச்சம், பஞ்சு,
இடம், கட்டம், வண்டல்.
தட்டு, பதநீர், மத்து, பந்து
பட்டு, இப்படி, கபிலை, கம்பி
அறம், முற்றம், பன்றி,

சொற்களின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் சில இடங்களில் மாத்திரை குறைகிறது. அதாவது ஒருமாத்திரை அளவான உகரம் அரை மாத்திரையாகக் குறைந்துவரும். இப்படி குறைந்து வருவது குற்றியலுகரம் எனப்படும்.

(உ-ம்) ஆறு, வயிறு. சுக்கு, பஞ்சு, சால்பு, எஃகு.

ஐகாரம் சொற்களின் முதலிடை கடைகளில் மாத்திரை குறைந்து வரும். தன்னைக் குறிக்கும்

போதும், அளவு எடுக்கும்போதும் மாத்திரை குறையாது. ஐகாரம் இரண்டு மாத்திரை அளவு உள்ளது. அது மாத்திரை குறையும்போது ஒரு மாத்திரையாகக் குறையும்.

(உ–ம்) தையல், இடையன், பகைவன், மகை.

ஔகாரம் சொல்லுக்கு முதலில் மாத்திரை குறைந்து வரும். தன்னைக் குறிக்கும்போதும் அளவு எடுக்கும்போதும் குறையாது. இரண்டு மாத்திரை அளவுள்ள ஔகாரம் குறையும்போது ஒரு மாத்திரை யாகக் குறையும்.

(உ–ம்) ஔவை, கௌவை.

மகரம், வகரத்தின்முன் தனக்குரிய அரை மாத்திரையில் குறைந்து கால் மாத்திரை பெற்று வரும்.

(உ–ம்) வரும் வண்டி, வலம் வந்தான்.

பயிற்சி

1. பின் வருபவை உயிர்ப்பு எழுத்துக்களா, ஒலிப்பு எழுத்துக்களா என்று கூறுக:

ச், ரு, உ, எ, ச, க், கு, ட, ஓ

2. பின் வருபவைகளில் மூக்கின் வழி ஒலிக்கும் எழுத்துக்களைத் தனியாகவும், வாயின் வழி ஒலிக்கும் எழுத்துக்களைத் தனியாகவும் பிரித்து எழுதுக:

யா, ஞ், ஆ, ஒ, கா, ஞா, ண், தா, ப், ஔ.

3. பின்வரும் சொற்களை அலகு பிரித்து எழுதுக:—

கொடுமை, படுக்கை, கட்டடம், எழுந்திருந்தான், பங்கத்துக் கொண்டான், இடையன், வினைவிடை, இராப்பகல்.

4. பின்வரும் சொற்களில் தடித்த எழுத்துக்கள் ஒலி அல்லது மாத்திரை குறையப்பெற்றனவா, அல்லவா என்று குறிக்க; மாத்திரை குறையப்பெற்றால் எவ்வளவு மாத்திரை பெற்றுவந்தது என்றும் குறிக்க:

தகரம், பங்கு, அச்சம், சினம், வட்டம், கடல், கண்டம், குன்று, பந்து, கத்தி, மனம், கௌவினன், கடை, மடையன், மரம், வளர்ந்தது, கௌவை, பனங்காய், பயறு, கட்டு, ஐந்து.

II. சொல்

1. சுட்டு, வினா

சுட்டு

பின்கண்டவற்றைக் கவனி :

அவன், அம்மனிதன்
இவன், இப்பலகை

இங்கு அ, இ என்னும் எழுத்துக்கள் பொருள்களைச் சுட்டிக்காட்ட வந்தன.

தெரிந்துகொள் :

பொருள்களைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துக்கள் சுட்டெழுத்துக்களாம்.

அ, இ என்பவை சுட்டெழுத்துக்களாக வந்ததை அறிந்தீர்கள். உ என்னும் எழுத்தும் சுட்டெழுத்தாக வரும்.

(உ-ம்) உவன், உப்பக்கம்,

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் மேற்பக்கம், பின்பக்கம், நடுவிடம் ஆகிய இடங்களிலுள்ள பொருளையும் சுட்டிக் காட்டும். சுட்டிக் காட்டும் பொருளில் வராவிட்டால் இவை சுட்டெழுத்துக்கள் ஆகா.

(உ-ம்) அண்ணன், இடம், உரல்.

பின்கண்டவற்றைக் கவனி:

எவன், எம்மனிதன்
எவர், எப்பக்கம்

மேற்கண்ட சொற்களில் எகரம் வினாப்பொருளை அறிவிக்க வந்தது. ஆதலால் அது வினா வெழுத்தாகும்.

வினாப்பொருளில் வராவிட்டால், எகரம் வினா வெழுத்து ஆகாது.

(உ-ம்) எள், எண்ணம்.

மேற்கண்ட சுட்டுச் சொற்களும், வினாச்சொற் களும் கொத்துக் கொத்தாக அமைந்து வரும்.

(உ-ம்) அவை, இவை, உவை, எவை..
அந்த, இந்த, உந்த, எந்த.
அம்மரம், இப்பசு, உப்படம், எப்பாகம்.

பயிற்சி

சுட்டு வினாச் சொற்கள் தொகுதியாக வந்ததற்கு உதாரணங்கள் தருக.

2. இடுகுறிப் பெயர், காரணப் பெயர்

கல், மண், மரம், பொன் — இப்பெயர்களைக் கவனியுங்கள். இவை அந்தந்தப் பொருள்களுக்கு எக்காரணத்தால் பெயர்களாக அமைந்தன என்று தெரியவில்லை. இவ்வகையான பெயர்கள் இடுகுறிப் பெயர்கள் எனப்படும்.

இடுகுறிப் பெயராவது இடப்பட்ட குறியாக அமைந்த பெயராம்.

பின் கண்ட பெயர்களைக் கவனி:

வளையல்—இது வளைந்திருக்கும் காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

சிலம்பு—இது ஒலிக்கும் காரணத்தால் ஏற்பட்ட பெயர். (*சிலம்பல்=ஒலித்தல்*)

நாற்காலி—இது நான்கு கால்களையுடைய காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

அகழி—அகழப்பட்ட அதாவது தோண்டப் பட்ட காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

ஆழி—ஆழமான காரணத்தால் ஏற்பட்ட பெயர். இவ்வாறு காரணங் கருதி இடப்பட்ட பெயர்கள் **காரணப் பெயர்களாம்.**

மேற்கூறியவற்றால் பெயர்கள் இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என இருவகைப்படுவதை அறிக.

பயிற்சி

1. இடுகுறிப் பெயர்கள் சில கூறு.
2. காரணப் பெயர்கள் சில கூறு.
3. பின்கண்ட பெயர்களைக் காரணப் பெயரா அன்ரு எனக் காரணம் காட்டிக் கூறு:

காற்றுடி, செடி, அரிவாள், முக்காலி, பலா, தென்னை, பனை, நிலம், பெரியவன், சிறியவன்.

3. வழூஉச் சொல்லும், திருத்தமும்

சென்ற இரண்டு வகுப்புகளிலும் சில வழூஉச் சொற்களையும், அவற்றைத் திருத்தமாகக் கூறும் முறைமையையும் அறிந்தீர்கள். இவ் வகுப்பிலும் அவ்வாறே சில வழூஉச் சொற்களையும், அவற்றைத் திருத்தமாகக் கூறும் விதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.

வழூஉச்சொல்		திருத்தம்
உத்திரவு	—	உத்தரவு
ஊரணி	—	ஊருணி
கயறு	—	கயிறு
கொடக்கூலி	—	குடிக்கூலி
சுவற்றில்	—	சுவரில்
பசுங்கன்று	—	பசுக்கன்று
பசும் பால்	—	பசுப்பால்
ரொம்ப	—	நிரம்ப
வயறு	—	வயிறு
முழுங்கு	—	விழுங்கு
ஒருவள்	—	ஒருத்தி
விரை	—	விதை
அதுகள்	—	அவைகள்

பயிற்சி

மேற்கூறப்பட்டவை அல்லாத சில வழூஉச் சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் கூறுக.

4. ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுதல்

ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடும் விதத்தைப் பற்றி முந்திய வகுப்புக்களிலும் நீங்கள் அறிந்தீர்கள். இவ்வகுப்பிலும் அவற்றைப் பற்றி மேலும் சிறிது தெரிந்து கொள்ளுங்கள்.

அறிவித்தான், தெரிவித்தான், புலப்படுத்தினான்—இவை மூன்றும் ஒருவனை அறியுமாறு செய்தான் எனப் பொருள்படும். ஆயினும் இவற்றுள் நுட்பமான பொருள் வேறுபாடு உண்டு. அதாவது,

அறிவித்தான்—என்பது சாதாரணமாக அறியுமாறு செய்தான் எனப் பொருள்படும்.

தெரிவித்தான்—என்பது தெரியாத ஒன்றைத் தெரியக் காட்டினான் எனப் பொருள்படும்.

புலப்படுத்தினான்—என்பது அறியுந்தனையும் விடாது, சொல்லி, அவன் அறிவுக்குட்படுமாறு செய்தான் எனப் பொருள்படும்.

தமிழில் ஓசையைக் குறிக்கும் சொற்கள் பல உள்ளன. அவை பொருளில் நுட்பமாக வேறுபடுவதைப் பின்னர் காட்டியுள்ள உதாரணங்களால் காண்க.

முழக்கு, இரட்டு, கலி, ஒலி, இசை, பிளிறு, இரை, குரை, கனை, இரங்கு, அழுங்கு, அதிர்,

சிலே, கும்மை, கௌவை, கம்பலே, அரவம், ஆர்ப்பு—இவை ஓசையைக் குறிக்கும் சொற்கள். இவற்றில்,

ஒலி, அரவம்—இவை மெல்லிய ஓசையைக் குறிக்கும்.

முழக்கு, இரட்டு, அதிர், இரை—இவை பேரோசையைக் குறிக்கும்.

கலி, இரங்கு, அழுங்கு—இவை துன்ப ஓசையைக் குறிக்கும்.

ஆர்ப்பு—இது மகிழ்ச்சியோசையைக் குறிக்கும்.

இசை—இது இனிய ஓசையைக் குறிக்கும்.

பிளிறு, கனே, குரை—இவை முறையே யானே, குதிரை, நாய் ஆகிய விலங்குகளின் ஒலியைக் குறிக்கும்.

சிலே, கும்மை, கௌவை, கம்பலே—இவை பலவகை ஒலிகளின் கலப்பைக் குறிக்கும்.

பயிற்சி

1. ஒரு பொருட் பல சொற்கள் பொருளில் நுட்பமாக வேறுபடுவதற்கு இங்குக் காட்டப்படாத உதாரணம் ஒன்று கூறுக.

2. கனே, பிளிறு, இசை, ஆர்ப்பு, முழக்கு, கம்பலே—இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

5. கால இடைநிலைகள்

வினைச்சொல்லில் இடைநிலைகள் காலங்காட்டும். அதனால் அவை கால இடைநிலைகள் எனப்படும். இந்த இடைநிலைகளைப் பற்றி முன் வகுப்பிலேயே நீங்கள் படித்திருக்கிறீர்கள். இப்போது அவற்றை நினைவு கூருங்கள்.

படித்தான் — இதில் த் இடைநிலை
உண்டான் — இதில் ட் இடைநிலை
கற்றான் — இதில் ற் இடைநிலை
வினாவினான் — இதில் இன் இடைநிலை
போனான் — இதில் ன் இடைநிலை
போயது — இதில் ய் இடைநிலை
தேடியது — இதில் இ இடைநிலை

மேற்கண்டவற்றிலிருந்து த், ட், ற், இன், ன், ய், இ ஆகியவை இறந்தகால இடைநிலைகள் என அறியலாம்,

வாரா நின்றான்— இதில் ஆநின்று இடைநிலை
வருகின்றான் — இதில் கின்று இடைநிலை
வருகிறான் — இதில் கிறு இடைநிலை

மேற்கூறியவற்றிலிருந்து ஆநின்று, கின்று, கிறு என்பவை நிகழ்கால இடைநிலைகள் என அறியலாம்.

படிப்பான் — இதில் ப் இடைநிலை
தருவான் — இதில் வ் இடைநிலை

மேற்கண்டவற்றிலிருந்து ப், வ் என்பவை எதிர்கால இடைநிலைகள் என அறியலாம்.

பயிற்சி

1. பின் வரும் வினைச்சொற்களிலுள்ள இடைநிலைகளை எடுத்தெழுதி அவை இன்னகால இடைநிலைகள் எனக் கூறுக.

தருகின்றான், சொன்னேன், கண்டாய், இருந்தான், வருவான், இருப்பாள், பார்த்தாய், வாசியாநின்றான், போயது, தாவியது, தேடினேன்.

6. இடைச்சொல்

வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், உவமவுருபுகள் — இவற்றைப் பற்றி முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். இவையெல்லாம் இடைச்சொல் என்பதனுள் அடங்கும். இடைச்சொல் என்பது தமிழ்ச்சொற்களில் ஒரு வகையாம்.

(உ-ம்) 1. இராமனை நோக்கினான்.

இந்த வாக்கியத்தில் இராமனை நோக்கினான் என இரண்டு சொற்கள் உள்ளன. இவற்றுள்

இராமனை என்பதிலுள்ள ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு இடைச்சொல்லாகும்.

நோக்கினான் என்பதில் இன் இறந்தகால இடைநிலை; ஆன் ஆண்பால் விகுதி. இந்த இடைநிலையும், விகுதியும் இடைச்சொற்கள்.

(உ-ம்) 2. நிலா பால்போல இருந்தது.

இந்த வாக்கியத்தில் நிலா, பால், போல, இருந்தது என நான்கு சொற்கள் உள்ளன. இவற்றுள்,

நிலா—பெயர்ச்சொல்; இதில் இடைச்சொல் இல்லை.

பால்—பெயர்ச்சொல்; இதில் இடைச்சொல் இல்லை.

போல—இது உவம உருபு. இது இடைச்சொல்

இருந்தது—இதில் த் இடைநிலை; இது இடைச் சொல்.

து—விகுதி; இது இடைச்சொல்.

இன்னும் சுட்டெழுத்து, வினா எழுத்து இவை களைப்பற்றி உங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் இடைச் சொற்களாம்.

(உ-ம்)	அப்பொருள்	— அ —	இடைச்சொல்
	இப்பிள்ளை	— இ —	இடைச்சொல்
	உப்பக்கம்	— உ —	இடைச்சொல்
	எப்பலகை	— எ —	இடைச்சொல்

இந்த சுட்டு வினாச்சொற்கள் முறையே அந்த, இந்த, உந்த, எந்த எனத் திரிந்தும் வரும். இவையும் இடைச்சொற்களாம்

(உ-ம்)	அந்தப்பையன்	-அந்த-	இடைச்சொல்
	இந்தப்பெண்	-இந்த-	இடைச்சொல்
	உந்தச்சிறுவன்	-உந்த-	இடைச்சொல்
	எந்தப் பிள்ளை	-எந்த-	இடைச்சொல்

மற்று, உம் என்பவையும் இடைச்சொற்களாம்.

(உ-ம்) நீ இங்கு வந்தாய்; மற்று அதனுல் என்ன பயன்?

கந்தனும் வேலனும் முருகனும் வந்தனர்.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களில் உள்ள இடைச்சொற்களை எடுத்தெழுதுக:

1. அவன் என்னேடு பேசினன்.
2. கண்ணனும் வள்ளியும் வருகின்றனர்கள்.
3. வேலனுக்கு இவன் பழங்கள் கொடுத்தான்.
4. வீட்டிலிருந்து நான் வந்துசேர நேரம் ஆயிற்று.
5. அந்த நாய் எலியின்மீது புலிபோலப் பாய்ந்தது.

7. உரிச்சொல்

பின்கண்டவைகளைக் கவனி:

உறுபுகழ்—இங்கு உறு என்பது மிகுந்த எனப் பொருள்பட்டுப் புகழ் எத்தகையது என அதன் பண்பை உணர்த்தும்.

நனிபேதை— இங்கு நனி என்பதும் அவ்வாறே மிகுந்த எனப் பொருள்பட்டு எத்தகைய பேதை எனப் பேதையின் பண்பை உணர்த்தும்.

புகழ், பேதை என்பன பெயர்கள் ஆகையால் உறு, நனி இரண்டும் பெயரின் பண்பை உணர்த்துவனவாம்.

சாலப்பேசினான்—இங்கு *சால* என்பது மிகுதி யும் எனப்பொருள்பட்டு பேசினான் என்னும் வினை யின் பண்பை உணர்த்தும்.

நனி தின்றான்—இங்கு *நனி* என்பது தின்றான் என்னும் வினையின் பண்பை உணர்த்தும்.

மேற்கண்டவாறு பெயர்வினைகளின் பண்பை உணர்த்தும் சொற்கள் *உரிச்சொற்கள்* எனப்படும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி—இந்த உரிச் சொற்கள் *மிகுதி* என்னும் ஒரு பொருளைக் குறிக்கும் உரிச்சொற்களாம்.

கடி என்னும் உரிச்சொல் பல பொருள்களை யுடைய உரிச்சொல். இதன் பொருள் வேறுபாடுகளை அடியிற் காண்க.

கடிமலர் - (மணமுள்ள) மலர்; கடி–மணம்
கடிமணம் - (புதிய) மணம்; கடி–புதுமை
கடிமனை -- (காவலையுடைய)மனை; கடி–காவல்
கடிமுரசு - (ஆர்க்கும்) முரசு; கடி–ஆர்ப்பு
கடிமார்பு - (விளக்கம்) பொருந்திய மார்பு;
கடி–விளக்கம்
கடிமிளகு - காரமான மிளகு; கடி–கரிப்பு

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களிலுள்ள உரிச்சொற்களை எடுத் தெழுது :

1. இராவணன் இராமன்மீது கடிப்பகை கொண்டான்.
2. குமணன் கொடை கொடுத்து உறுபுகழ் பெற்றான்.

3. நனி பேதையாகிய அப் பெண் அறியாது பேசி விட்டாள்.

4. அவ்வூரில் கடிமணம் நடைபெற்றது.

5. கடிமலர் தூவிக் கடவுளைத் தொழுதான்

6. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.

8. சாரியைகள்

சொற்களில் பகுதி, விகுதி, இடைநிலை என மூன்று உறுப்புக்கள் அமைந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். இவற்றைத் தவிரச் சாரியை என்னும் மற்றொரு உறுப்பும் சில சொற்களில் அமைந் திருக்கும். சாரியைகள் பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்திருக்கும்.

(உ-ம்) (1) *தின்றனன்* — (*தின்* + *ற்* + *அன்* + *அன்*); இதில் *தின்*—பகுதி; *ற்*—இடைநிலை; *அன்*—சாரியை; *அன்*—விகுதி.

(2) சொல்லியது—(சொல் + ல் + இ + அ + து); இதில் சொல்—பகுதி; ல்—புணர்ச்சியால் தோன்றிய எழுத்து; இ—இடைநிலை; அ—சாரியை; து—விகுதி. வினைச்சொல்லில் சாரியை வருவது இங்கு கூறப் பட்டது. இனி பெயர்ச் சொல்லிலும் சாரியை வரும்.

(உ-ம்) (1) மரத்தினுக்கு — (மரம் + அத்து + இன் + உ + கு)—இதில் அத்து, இன், உ என்பவை சாரியைகள்.

(2) புளியங்காய் — (புளி + அம் + காய்); இதில் அம் சாரியை.

(3) அவற்றை — (அல்+அற்று+ஐ); இதில் அற்று சாரியை.

(4) பதிற்றுப்பத்து—(பத்து+இற்று+பத்து); இதில் இற்று சாரியை.

பயிற்சி

பின்வரும் சொற்களிலுள்ள சாரியைகளை எடுத்தெழுதுக:
கோவிலுக்கு, இடத்தின், வேப்பங்காய், நடந்தனன், எண்ணியது, அவனுக்கு, இடத்தினின்று.

9. ஆகுபெயர்

பின்கண்டவைகளைப் படி :

நாடு அவனைப் புகழ்ந்தது.
வெற்றிலை நட்டான்.
வெள்ளை உழுதது.
பொங்கல் உண்டான்.
நான்கு கஜம் கொடு.

இங்குள்ள வாக்கியங்களில் தடித்த சொற்கள் எவைகளைக் குறிக்கின்றன?

நாடு என்னும் இடத்தின் பெயர், இடத்தைக் குறிக்காமல் அந்த இடத்திலுள்ள மக்களைக் குறித்தது.

வெற்றிலை என்னும் சினையின் பெயர், அந்தச் சினையை உடைய கொடியாகிய முதற்பொருளைக் குறித்தது.

வெள்ளை என்னும் நிறக் குணத்தின் பெயர். அக்குணத்தையுடைய மாட்டைக் குறித்தது.

பொங்கல் என்னும் தொழிலின் பெயர் அத் தொழிலாலுண்டான உணவுப்பொருளைக் குறித்தது.

கஜம் என்னும் நீட்டலளவைப் பெயர், அவ்வள வினைக்கொண்ட துணியைக் குறித்தது.

மேற்கண்டவாறு, ஒரு பொருளின் பெயர் அப் பொருளைக் குறிக்காமல் அதற்குத் தொடர்பான மற்ருெரு பொருளைக் குறித்தால் அது ஆகுபெயர் எனப்படும். இவ்வாறன்றிப் பொருளுக்கு இயல்பாக அமைந்த பெயர் இயற்பெயர் எனப்படும்.

(உ-ம்) மரம், கல், நாடு, ஊர், வெள்ளை, கறுப்பு.

குறிப்பு: ஆகுபெயர் புதிதாக உண்டாக்கப் படுவது அல்ல. தொன்றுதொட்டு வழங்கி வருவதாம்.

பயிற்சி

பின்கண்ட வாக்கியங்களிலுள்ள ஆகுபெயர்களை எடுத்து எழுதி, அவை இன்னவற்றிற்குப் பெயர் என்றும், இன்னவை யைக் குறித்தன என்றும் குறிக்க.

1. மருக்கொழுந்து நட்டான்.
2. வற்றல் உண்டான்.
3. காவி உடுத்தினன்.
4. தாமரை சூடினன்.
5. ஊர் சிரித்தது.

10. வெளிப்படைக் குறிப்பு

சில சொற்கள் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும். வேறு சில சொற்கள் குறிப்பாகப் பொருள் உணர்த்தும். வெளிப்படையாகப் பொருள் உணர்த்துவது வெளிப்படைச் சொல்லாம். குறிப்பாகப் பொருள் உணர்த்துவது குறிப்புச் சொல்லாம்.

(உ-ம்) 1. *மாடுகள்* — இச் சொல் வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது பசு மாடு, காளை மாடு இரண்டையும் உணர்த்தும்.

அந்த மாடுகள் உழுதன — இங்கு உழுதன என்னும் செயலால் மாடுகள் என்னும் சொல் காளை மாடுகளைக் குறிப்பால் உணர்த்திற்று.

2. *மூவர்*—இது வெளிப்படையாகப் பொருளை உணர்த்தும்போது மூன்று மனிதரைக் குறிக்கும்.

மூவர் தேவாரம் — இதில் மூவர் என்பது குறிப்பாக, சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் சைவசமயாச்சாரியரைக் குறிக்கும்.

3. *வெள்ளை* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது வெண்மை நிறத்தைக் குறிக்கும்.

வெள்ளை கறந்தது—இங்கு வெள்ளை என்பது குறிப்பாக வெள்ளை நிறமுடைய பசுவைக் குறித்தது.

4. *பொற்றொடி* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது பொன்னாலான வளையலை உணர்த்தும்.

பொற்றொடி வந்தாள் — இங்குப் பொற்றொடி என்பது குறிப்பாக ஒரு பெண்ணை உணர்த்திற்று.

5. *பொய்யாமொழி* — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது உண்மை மொழியை உணர்த்தும். குறிப்பாக இது திருக்குறளை உணர்த்தும்.

6. வேங்கை — இது வெளிப்படையாகப் பொருள் உணர்த்தும்போது புலியைக் குறிக்கும்.

பாயா வேங்கை — இதில் வேங்கை என்பது குறிப்பாக ஒருவகை மரத்தை உணர்த்திற்று.

7. *கால் கழுவி வந்தான்* — இதில் *கால் கழுவி* என்பது வெளிப்படையாகக் காலைக் கழுவுவதையும், குறிப்பாக மலங் கழுவுவதையும் குறிக்கும்.

பயிற்சி

மேற்கண்டவை யல்லாத குறிப்புச் சொற்கள் சிலவற்றைக் கூறுக.

11. இயல்பு வழக்கு

கோவில் — இது இலக்கணத்தோடு பொருந்தி இறைவனது இருப்பிடத்தைக் குறித்தது.

இல்முன் — இது இலக்கணத்தோடு பொருந்தி வீட்டின் முன்புறத்தைக் குறித்தது.

நகர்ப்புறம் — இது இலக்கணத்தோடு பொருந்தி நகரின் வெளிப்புறத்தைக் குறிக்கும். ஆகவே மேற்கண்டவை இலக்கணம் உடையவை ஆகும்,

கோயில்—இது இலக்கணத்தோடு பொருந்திய தல்ல: ஏனெனில் கோ + இல் = கோவில் எனச் சேர வேண்டுமேயன்றிக் கோயில் என யகரவுடம்படுமெய் பெறுதல் கூடாது. இது இலக்கணமுடையது அன்ருயினும், பெரியோர்களால் இலக்கணமுடைய தாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.

முன்றில் — இது இல்முன் என்னும் பொருளையே உடையது. இல்லும், முன்னும் முன்பின்னுகச் சேர்ந்து மாறுபாடு அடைந்து இவ்வாறு வந்துள்ளன. இது இலக்கணம் அன்ருயினும், இலக்கணமுடையது போலச் சான்ருேரால் கொள்ளப்பட்டுள்ளது.

புறநகர் — இதுவும் நகர், புறம் என்னும் சொற்கள் முன் பின்னுகச் சேர்ந்து வந்தது. இதுவும் இலக்கண மன்ருயினும், இலக்கணமுடையது போலச் சான்ருேரால் கொள்ளப்பட்டது. இவ்வாறு இலக்கணமன்ருயினும் இலக்கணமுடையதுபோலச் சான்ருேரால் கொள்ளப்பட்டவை **இலக்கணப் போலி** எனப்படும்.

அருமந்த — *அருமருந்தன்ன* என்பது இவ்வாறு மாறி வந்தது.

தஞ்சை—தஞ்சாவூர் என்பது இவ்வாறு மாறி வந்துள்ளது.

எந்தை—எமது தந்தை என்பது இவ்வாறு மாறி வந்துள்ளது.

மேற்கண்டவாறு சொற்கள் பலவித மாறுபாடுகளை அடைந்து வருவது மரூஉ எனப்படும்.

இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என இயல்பு வழக்கு மூன்று வகைப்படும்.

இயல்பு வழக்காவது இயல்பாய் வழங்கி வரும் உலக வழக்கு ஆகும்.

பயிற்சி

இலக்கண்முடையது, இலக்கணப்போலி, மரூஉ என்னும் மூவகை இயல்பு வழக்குகளுக்கும் இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.

12. தகுதி வழக்கு

பின் கண்டவற்றைக் கவனி:

குழந்தை வெளிக்குப் போயிற்று—இது குழந்தை மலங்கழித்தது என்பதைத் தெரிவிக்கும்

அவன் கால் கழுவி வந்தான்—இது ஒருவன் மலங் கழுவி வந்தான் என்பதைக் குறிக்கும்.

இவ்வாறு ஒன்றை மறைத்து மாற்றிக் கூறுதல் இடக்கர் அடக்கல் எனப்படும். இடக்கர் அடக்க

லாவது தகுதி அல்லாததைத் தகுதியாக ஆக்கிக் கூறுதலாம்.

தாலி பெருகிற்று—இது தாலி அறுந்ததை உணர்த்தும்.

இயற்கை எய்தினர்—இது இறந்தார் என்பதைக் குறிக்கும்.

இவை மங்கலம் அல்லாதனவற்றை மங்கலமாகக் கூறியவை. ஆதலால் இவை **மங்கலம்** எனப்படும்.

பறி—இது ஒரு கூட்டத்தார் பொன்னுக்குப் பெயராக வழங்கும் சொல்.

சொல்விளம்பி—இது ஒரு கூட்டத்தார் கள்ளுக்குப் பெயராக வழங்கும் சொல்.

இவை குறிப்பிட்ட கூட்டத்தாரால் தமக்கு மட்டும் விளங்கும் வகையில் கூறியவை. ஆதலால் *குழூஉக்குறி* எனப்படும். **இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி** ஆகிய மூன்றும் **தகுதி வழக்காம்.** தகுதி வழக்காவது தகுதியல்லாதனவற்றைத் தகுதியாக ஆக்கிக் கூறும் வழக்காம்.

பயிற்சி

இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்னும் தகுதி வழக்கிற்கு இங்குக் காட்டப்படாத உதாரணங்கள் சில கூறுக.

III. தொடராக்கம்

1. தொகைநிலைத் தொடர்கள்

பின்கண்டவைகளைக் கவனி :

1. *நிலம் விற்ருன்*—இது நிலத்தை விற்ருன் எனப் பொருள்படும். இங்கு இரண்டாம் வேற்றுமை உருபு ஆகிய ஐ என்பது தொக்கு (மறைந்து) நிற்கிறது.

2. *பவள வாய்*—இது பவளம் போன்ற வாய் எனப் பொருள்படும். இங்கு *போன்ற* என்னும் உவமவுருபு தொக்கு நிற்கிறது.

இவ்வாறு இடையில் சில சொற்கள் தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது தொகைநிலை எனப்படும். இவ்வாறு தொடர்ந்து வந்த தொடர் *தொகைநிலைத் தொடர்* எனப்படும்.

முதல் உதாரணத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு தொக்கு வந்ததை அறிந்தீர்கள். அது இரண்டாம் வேற்றுமைத் தொகை. அதுமட்டுமின்றி மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு ஆகிய வேற்றுமை உருபுகளும் மேற்கண்டவாறு தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது உண்டு. அவை அந்தந்த வேற்றுமைத் தொகைகளாகும்.

(உ-ம்) *தலை வணங்கினுன்* — இது தலையால் வணங்கினுன் எனப் பொருள்படும். இங்கு ஆல்

என்னும் மூன்றும் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது மூன்றும் வேற்றுமைத் தொகை.)

வண்ணான் கூலி—இது வண்ணானுக்கு உரிய *கூலி* எனப் பொருள்படும். இங்கு கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு தொக்கு வந்தது. (இது நான்காம் வேற்றுமைத் தொகை)

நகர் நீங்கினான்—இது நகரின் (நகரிலிருந்து) நீங்கினான் எனப் பொருள்படும். இங்கு இன் என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது ஐந்தாம் வேற்றுமைத் தொகை.)

கண்ணன்கை—இது கண்ணனது கை எனப் பொருள்படும். இங்கு அது என்னும் ஆறும் வேற்றுமை உருபு தொக்கது. (இது ஆறும் வேற்றுமைத் தொகை.)

மரப்பொந்து—இது மரத்தின் கண் உள்ள பொந்து என்று பொருள்படும், இங்கு ஏழாம் வேற்றுமை உருபு தொக்கு நின்றது. (இது ஏழாம் வேற்றுமைத் தொகை.)

முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தொகை நிலைத் தொடராக வாரா.

சுடுசோறு—இது சுடுகின்ற சோறு எனப் பொருள்படும். இது வினைச்சொல்லும் அதனோடு பொருந்துதற்குரிய பெயர்ச் சொல்லுமாய்த் தொடர்ந்தது. இடையில் காலங்காட்டும் இடைநிலை தொக்கு நின்றது. இவ்வாறு வருவது *வினைத்தொகை* எனப்படும்.

கருமேகம்—இது கருமையாகிய மேகம் எனப் பொருள்படும். இங்கு *ஆகிய* என்னும் பண்புருபு தொக்கு நின்றது. இவ்வாறு வருவது *பண்புத்தொகை* எனப்படும்.

தாமரைக்கண்—இது தாமரை போன்ற கண் எனப்பொருள்படும். இங்கு *போன்ற* என்னும் உவம உருபு தொக்கு நின்றது. இவ்வாறு வருவது *உவமைத்தொகை* எனப்படும்.

இராப்பகல்—இது *இரவும்* பகலும் எனப் பொருள்படும். இங்கு *உம்மை* தொக்கு நின்றது. இவ்வாறு வருவது *உம்மைத்தொகை* எனப்படும்.

மதிமுகம் வந்தாள்—இது மதி போன்ற முகத்தையுடைய பெண் வந்தாள் எனப் பொருள் படும். *மதிமுகம்* என்பது மதி போன்ற முகம் எனப் பொருள்படுமாதலால் உவமைத் தொகையாம். அத் தொகைக்கு மேலும் இங்கு அவ்வித முகத்தை உடையவள் என வேறு சில சொற்கள் தொக்கு நிற்பதைக் காண்க. இவ்வாறு வருவது *அன்மொழித்தொகை* எனப்படும்.

ஆகவே, தொகைநிலைத்தொடர்கள், *வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை* என ஆறு வகைப்படும்.

2. தொகாநிலைத் தொடர்கள்

இடையில் எதுவும் தொக்கு நிற்காமல் சொற்கள் தொடர்ந்து வந்தால் அவை தொகா நிலைத் தொடர்களாம்.

(உ-ம்) 1. *இராமன் வந்தான்*—இது முதலில் எழுவாயும், பிறகு பயனிலையுமாகத் தொடர்ந்து வந்தது. ஆதலால் இது எழுவாய்த் தொடராம்.

2. *அண்ணா, வா*—இது விளியும் பயனிலையு மாகத் தொடர்ந்து வந்தது. இது *விளித்தொடராம்.*

3. *படித்த மனிதர்*—இது பெயரெச்சமும் அது கொண்டு முடியும் பெயருமாகத் தொடர்ந்தது. இது பெயரெச்சத்தொடர் எனப்படும்.

4. *வந்து சென்றான்*—இது வினையெச்சமும் அது கொண்டு முடியும் வினையுமாகத் தொடர்ந்தது. இது *வினையெச்சத்தொடராம்.*

5. *வந்தான் பரதன்*—இது முதலில் பயனிலை யும் பின்னர் எழுவாயுமாகத் தொடர்ந்து வந்தது; இது *வினைமுற்றுத்தொடர்* எனப்படும்.

6. *மற்றொன்று* — இது மற்று என்னும் இடைச்சொல்லும், அதனோடு சேருதற்குரிய சொல்லுமாகச் சேர்ந்து வந்தது. இது இடைச் *சொற்றொடர்* எனப்படும்.

7. *சாலப் பேசினான்* — இது உரிச்சொல்லும் அதனோடு சேர்தற்குரிய சொல்லுமாகச் சேர்ந்து வந்தது. இது *உரிச் சொற்றொடராம்.*

8. பாம்பு பாம்பு — இங்கு ஒரு சொல் பல முறை அடுக்கி வந்தது. இது அடுக்குத் தொடராம்.

ஆகவே, எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், வினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச் சொற்றொடர், அடுக்குத்தொடர் என்னும் எட்டுத்தொடர்களும் தொகாநிலைத்தொடர்கள் என அறியலாம்.

பயிற்சி

1. பின்கண்டவை இன்ன தொகைகள் எனக்கூறுக:

(1)	கல்லெறிந்தான்	(6)	வேலன் புத்தகம்
(2)	கருங்குழல்	(7)	வீடு வாங்கினான்
(3)	காட்டுக்கோழி	(8)	கம்பராமாயணம்
(4)	சேரசோழபாண்டியர்	(9)	பூசுத்கன்று
(5)	கொல் யானை	(10)	பொற்றொடி நின்றான்

2. பின்கண்டவை இன்னதொடர் எனக்கூறுக:

(1)	மகன் நின்றான்	(6)	போ போ போ
(2)	தம்பீ, வா	(7)	மற்றது
(3)	கற்ற கல்வி	(8)	தனி பேதை
(4)	சென்றான் அவன்	(9)	கோழி கூவிற்று
(5)	நின்று பேசினான்	(10)	பறக்கும் பட்டம்

IV. புணர்ச்சி

1. உயிர்முன் வல்லினம்

மிகும் இடங்கள்

பின்கண்டவைகளைக் கவனி.

பாட	+	கண்டேன்	=	பாடக்கண்டேன்
ஓட	+	பார்த்தான்	=	ஓடப்பார்த்தான்
வர	+	சொன்னான்	=	வரச்சொன்னான்
படிக்க	+	தந்தான்	=	படிக்கத்தந்தான்
வாங்க	+	சென்றான்	=	வாங்கச்சென்றான்

மேற்கண்டவற்றிலிருந்து அகரவீற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும் என அறியலாம்.

தேடி	+	காண்	=	தேடிக்காண்
ஓடி	+	போனான்	=	ஓடிப்போனான்
நாடி	+	செல்	=	நாடிச்செல்
அன்றி	+	போதல்	=	அன்றிப்போதல்
இன்றி	+	பார்த்தால்	=	இன்றிப்பார்த்தல்

இகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகும் என இவற்றால் அறியலாம்.

வாழை	+	காய்	=	வாழைக்காய்
பலா	+	பழம்	=	பலாப்பழம்
குதிரை	+	குட்டி	=	குதிரைக்குட்டி
குடி	+	கூலி	=	குடிக்கூலி
நரி	+	தலை	=	நரித்தலை

உயிரீற்றின் முன்வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என இவற்ருல் அறியலாம்,

மிகா இடங்கள்

பின்கண்டவைகளைக் கவனி:

நின்ற + பையன் = நின்ற பையன்
கண்ட + கப்பல் = கண்ட கப்பல்
நிற்கின்ற + பெரியார் = நிற்கின்ற பெரியார்
வருகிற + சிறுவன் = வருகிற சிறுவன்
தருகிற + காலம் = தருகிற காலம்

அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் முன் வரும், வல்லினம் மிகாது என இவற்ருல் அறியலாம்.

வந்து + சேர்ந்தான் = வந்து சேர்ந்தான்
நின்று + பார்த்தான் = நின்று பார்த்தான்
செய்து + போனுன் = செய்து போனுன்
கண்டு + தந்தான் = கண்டு தந்தான்
இருந்து + சென்ருன் = இருந்து சென்ருன்

உகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகாது என இவற்ருல் அறியலாம்.

2. மெய்ம்முன் உயிர்

லகர ளகர ஈறு

பின்கண்டவைகளைக் கவனி:

கல் + எறி = கல்லெறி
புல் + இது = புல்லிது
எள் + எடு = எள்ளெடு
முள் + எடு = முள்ளெடு

தனிக்குறிலைச் சார்ந்த லகர ளகரங்களின் முன் உயிர் வந்தால் அந்த லகர ளகரங்கள் மிகும்.

பால்	+	ஏடு	=	பாலேடு
அவல்	+	இது	=	அவலிது
வாள்	+	எடு	=	வாளெடு
அவள்	+	எங்கே	=	அவளெங்கே

தனிக் குறிலைச் சாராத லகர ளகரங்களின் முன் உயிர் வந்தால் அவை மிகா.

3. மெய்ம்முன் மெய்

லகர ளகர ஈறு

கல்	+	சட்டி	=	கற்சட்டி
பால்	+	சோறு	=	பாற்சோறு
முள்	+	செடி	=	முட்செடி
வாள்	+	போர்	=	வாட்போர்

லகர ளகரங்களின் முன் வல்லினம் வந்தால் அந்த லகர ளகரங்கள் முறையே, றகர டகரங்களாகத் திரியும்.

சொல்	+	மாலை	=	சொன்மாலை
பால்	+	மொழி	=	பான்மொழி
முள்	+	முனை	=	முண்முனை
நாள்	+	மலர்	=	நாண்மலர்

லகர ளகரங்களின் முன் மெல்லினம் வந்தால் அந்த லகர ளகரங்கள் முறையே னகர ணகரங்களாகத் திரியும்.

நல் + யாழ் = நல்யாழ்
முள் + யாது = முள்யாது

லகர ளகரங்களின் முன் இடையினம் வந்தால் இயல்பாகும்.

4. மெய்ம்முன் மெய்

னகர ணகர ஈறு

பொன் + காசு = பொற்காசு
தன் + பெருமை = தற்பெருமை
மண் + பாண்டம் = மட்பாண்டம்
கண் + புலன் = கட்புலன்

னகர ணகரங்களின் முன் வல்லினம் வந்தால் அந்த னகர ணகரங்கள் முறையே றகர டகரங்களாகத் திரியும்.

பொன் + மணி = பொன்மணி
என் + வளையல் = என்வளையல்
தன் + மகன் = தன்மகன்
அவன் + யாழ் = அவன்யாழ்
கண் + வலி = கண்வலி

னகர ணகரங்களின் முன் மெல்லின இடையினங்கள் வந்தால் அந்த னகர ணகரங்கள் இயல்பாகும்.

5. மெய்ம்முன் மெய்

மகர ஈறு

மரம் + கண்டான் = மரங்கண்டான்
இடம் + தந்தான் = இடந்தந்தான்
வலம் + சென்றது = வலஞ்சென்றது

மகர ஈறு வல்லினம் வரச் சில இடங்களில் இன மெல்லெழுத்தாகத் திரிந்தது.

மரம் + கிளை = மரக்கிளை
குணம் + குன்று = குணக்குன்று
நிலம் + பனை = நிலப்பனை

மகர ஈறு வல்லினம் வரச் சில இடங்களில் கெட்டு, வந்த வல்லினம் மிகுந்தது.

மனம் + மாழ்கிற்று = மனமாழ்கிற்று
மனம் + நெகிழ்ந்தது = மனநெகிழ்ந்தது
மரம் + வேர் = மரவேர்

மகர ஈறு மெல்லின இடையினங்கள் வரச் சில இடங்களில் கெட்டது.

6. சில விசேடப் புணர்ச்சிகள்

பூ + கொடி = பூங்கொடி
பூ + செடி = பூஞ்செடி
பூ + தாது = பூந்தாது
பூ + புகார் = பூம்புகார்

பூ என்னும் சொல்லின்முன் வல்லினம் வந்தால் வந்த வல்லினத்துக்கு இனமான மெல்லினம் மிகும்.

பல + பல = பலபல, பலப்பல, பல்பல
பல + யானை = பலயானை, பல்யானை
பல + மணி = பலமணி, பன்மணி
சில + சில = சிலசில, சிற்சில, சிலச்சில
சில + நாள் = சில நாள், சின்னாள்
சில + வளை = சிலவளை, சில்வளை

பல, சில என்பவைகளின் முன் அதே சொற்கள் வந்தாலும், வேறு சொற்கள் வந்தாலும் அவை இயல்பாகவேனும் பல மாறுபாடுகளை அடைந்தேனும் புணரும்.

அகம் + கை = அங்கை
அகம் + செவி = அஞ்செவி

அகம் என்னும் சொல்லின் முன்னர்க் கை, செவி என்னும் சொற்கள் வந்தால், அந்த அகம் என்பதன் இடையிலுள்ள ககரமும் அகரமும் கெடும்.

பயிற்சி

பின்கண்டவை இன்ன விதிப்படி புணர்ந்தன எனக்கூறுக:

1. படித்த பையன்
2. தென்மணி
3. பொற்கலம்
4. அங்கை
5. இடஞ்சிறிது
6. நிலப்பனை
7. கண்மணி
8. வந்து போனான்
9. சிலச்சில
10. பல்காலம்
11. தேடிச்சென்றான்
12. நாடிக்கண்டான்
13. பல்லுடைந்தது
14. கண் வலி
15. முள்ளொலி
16. முண் முருங்கை
17. எட்செடி
18. கட்புலன்
19. மரநார்
20. பூம்பத்தர்

V. அணிகள்

1. தற்குறிப்பேற்ற அணி

1. "கண்ணன் துவாரகையில் புகுந்தபோது அந்த நகரத்துக் கொடிகள் ஆடியது, கண்ணனை அன்போடு கைகாட்டி வரவேற்பதுபோல் இருந்தது"

மேற்கண்ட வாக்கியத்தில் காற்றால் கொடிகள் ஆடியதைக் குறித்து, புலவர் தமது குறிப்பை ஏற்றிக் கூறுவாராய், அவை கண்ணனை வரவேற்பதற்காக ஆடின என்று கூறியது காண்க.

2. "நிலத்தின் மீது அந்தப் பௌர்ணமி நாளில் வெள்ளிய நிலாப் பரவியிருந்ததானது, நிலமகள் வெள்ளைப் போர்வையைப் போர்த்துக் கொண்டது போன்று இருந்தது."

மேற்கண்ட வாக்கியத்தில் இயல்பாக நிலாப் பரந்ததைக் குறித்துப் புலவர் தம் குறிப்பை ஏற்றி, நிலமகள் வெள்ளைப் போர்வை போர்த்துக்கொண்டதாகக் கூறியது காண்க.

இவ்வாறு இயல்பாக நிகழ்ந்த செய்தியொன்றின் மீது புலவர் தம் குறிப்பை ஏற்றி, அது ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு நிகழ்ந்ததாகக் கூறுவது தற்குறிப்பேற்ற அணியாம்.

பயிற்சி

உங்கள் பாடப்புத்தகத்திலுள்ள செய்யுட்களில் ஏதேனும் தற்குறிப்பேற்ற அணி வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

2. தன்மை நவிற்சி யணி

உள்ளதை உள்ளபடி கூறுவது தன்மை நவிற்சி யணியாம்

(உ-ம்) 1. இந்த மலை உயரமானது.
2. குதிரை வேகமாய் ஓடுகிறது.
3. கொக்கு வெண்மை நிறமானது.

பயிற்சி

தன்மை நவிற்சி யணிக்கு இரண்டு உதாரணம் கூறுக:

3. உயர்வு நவிற்சியணி

1. இந்த வீடு உயரத்தால் சொர்க்கத்தைத் தொடுகின்றது.

2. இந்த உணவு உருசியில் அமுதத்தைத் தோற்கடிக்கிறது.

3. இந்நகர் இந்திரனது அமராவதியைப் பழிப்பது.

மேற்கண்டவாறு வருவன உயர்வுநவிற்சி யணியாம்.

பயிற்சி

உயர்வு நவிற்சி யணி உங்களுக்குப் பாடமாக வந்துள்ள செய்யுட்களில் வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

4. முரண் தொடை அணி

கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே.

மேற்கண்ட பாட்டில்,

கல்லார்	—	கற்றவர்
காணார்	—	கண்டவர்
வல்லார்	—	மாட்டார்
மதியார்	—	மதிப்பவர்

என ஒன்றுக்கொன்று முரணுக உள்ள சொற்களைத் தொடுத்துக் கூறியிருத்தல் காண்க. இவ்வாறு வருவது முரண் தொடை அணியாம்.

பயிற்சி

உங்கள் செய்யுட் பாடத்தில் முரண் தொடை அணி ஏதேனும் வந்திருந்தால் எடுத்துக் கூறுக.

VI. நிறுத்தற் குறிகள்

சென்ற இரண்டு வகுப்புக்களிலும் நிறுத்தற் குறிகள் பலவற்றை நீங்கள் அறிந்தீர்கள். இவ் வகுப்பிலும் சிலவற்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.

1. கோடு இடுதல்

ஒரு செய்தியைக் கூறிவருங்கால், திடீரெனக் கருத்து வேறுபட்டு வேறு செய்தியைக் கூற நேர்ந் தால், இரண்டு செய்திகட்கும் இடையில் ஒரு கோட்டை இட வேண்டும்.

(உ-ம்) 1. நான் அவனுக்கு எவ்வளவோ எடுத் துச் சொன்னேன்—அதை இப்போது நினைத்துப் பயனில்லை.

2 நமது பாரதநாடு மிகப்பெரிய நாடு; ஏன்? —அதைக் கண்டம் என்றுகூடச் சொல்லலாம்.

பயிற்சி

மேற்கண்டவாறு நீங்கள் இரண்டு வாக்கியங்கள் கூறுங் கள்.

2. இடைப்பிற வைப்புக் குறிகள்

ஒரு செய்தியை முற்றும் கூறி முடிக்குமுன் இடையில் ஒரு செய்தியைப் புகுத்த நேரிடுமானல், இடையில் புகுத்தும் செய்திக்கு முன்னும் பின்னும் கோடு இட வேண்டும். இவ்வாறு இடப்படும் இரண்டு கோடுகள் ***இடைப்பிற வைப்புக் குறிகளாம்.***

(உ-ம்) 1. நீ செய்யும் பெருந்தவறுகள்—நீ என்ன நினைத்துக்கொண்டாலும் சரி — எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

2. உனக்கு நான் கூறுவது — நீ என்னவோ முகத்தைத் திருப்பிக்கொள்கிறாய்—மிகவும் நன்மை பயப்பதாகும்.

பயிற்சி

1. உங்கள் வசன பாடங்களில் இத்தகைய வாக்கியங்கள் இருந்தால் எடுத்து எழுதுக.

2. மேற்கண்ட விதமான வாக்கியங்கள் இரண்டு கூறுக.

3. பிறைக் குறிகள்

( ) இவை பிறைக் குறிகள்

வாக்கியங்களின் இடையில் ஏதாவது ஒரு செய்தியை விளக்க நேர்ந்தால், விளக்கிக் கூறிய செய்திக்கு முன்னும் பின்னுமாக இக்குறிகள் இடப்படும்.

(உ-ம்) கல்வி கற்பவன் நாற்பேறுகளையும் (அதாவது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும்) ஒருங்கே அடைவான்.

வேறு சில இடங்களிலும் இப்பிறைக் குறிகள் இடுவதுண்டு.

(உ-ம்) 1. அவர் நிரம்பக் கல்வி கற்றவர். (இவ்வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றிக் கூறுக.)

2. வீமன் ———— மிகுந்தவன். (கோடிட்ட இடத்தில் ஏற்ற ஒரு சொல்லை அமைக்க)

3. ———— கருமை நிறமானது. (இங்கு கோடிட்ட இடத்தில் ஏற்ற ஒரு சொல்லை அமைக்க)

இவ்வாறு பயிற்சி தருதற்குரிய இடங்களில் இப் பிறைக் குறிகள் இடப்படுவது உண்டு.

பயிற்சி

1. பிறைக்குறி பொருந்துமாறு நான்கு உதாரணங்கள் தருக.

பயிற்சி வினாக்கள்

1. எழுத்துக்கள் சொல்லில் இடத்துக்கேற்ப ஒலி மாறி வருவதற்குப் பத்து உதாரணங்கள் தருக.

2. சுட்டு வினாச் சொற்கள் தொகுதியாக வருவதற்கு மூன்று தொகுதி உதாரணங்கள் தருக.

3. பின்கண்ட பெயர்களில் இடுகுறி காரணப் பெயர்களைத் தனித்தனியே எடுத்தெழுதிக் காரணப் பெயர்களுக்குக் காரணமும் கூறுக,

வளையல், முக்காலி, தலை, கால், கடல், கப்பல், சிலம்பு, கரியன். காற்றாடி, நாற்காலி.

4. பின்கண்ட வழூஉச் சொற்களைத் திருத்திக் கூறுக;

தாவாரம், முந்தாணி, எதுகள், ஓசனை, அக்கிருவம், முழுங்கு, குடக்கூலி, எறக்கம், கொழப்பம்.

5. ஒருபொருட் பலசொற்கள், பொருளில் நுட்பமாக வேறுபடுவதற்கு ஏதாவது ஒரு உதாரணம் கொடு.

6. பின்கண்டவற்றிலுள்ள இடைச் சொற்களை எடுத்தெழுதுக:

சொன்னான், காணாநின்றான், தாவியது, தருவான், மரத்துக்கு, வீட்டினின்று, இப்பெட்டி, உப்பக்கம்.

7. கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்களில் மூன்று கூறி, அவற்றுக்கு உதாரணமும் கொடுக்க.

8. ஆகுபெயர்களுக்கு நான்கு உதாரணங்கள் தருக. அவை எவ்வாறு ஆகுபெயர்களாகும் என விளக்குக.

9. குறிப்புச் சொற்களுக்கு நான்கு உதாரணங்கள் கூறி, அவை எவ்வாறு குறிப்புச் சொற்களாகும் என விளக்குக:

10. இயல்பு வழக்கின் வகைகள் யாவை? வகை ஒன்றுக்கு ஒரு உதாரணம் வீதம் தருக.

11. மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி, இலக்கணப்போலி, மரூஉ—இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் கொடுக்க.

12. பின்கண்டவை இன்ன தொகைகள் என்பதைக் காரணத்தோடு கூறுக:

இராமலக்ஷ்மணபரதசத்ருக்கினர். கூலிவேலை, வட்டப்பலகை, தோட்டவேலை, மரக்கிளை, விடு சரம், சுடுசோறு, மதிமுகம், கருங்குழல் நின்ருள்,பொற்ருெடி பார்த்தாள், பொற்ருெடி, கருங்குவளை.

13. பின் கண்டவை இன்ன தொடர்கள் எனக் கூறுக,

கடிநகர், வந்த பையன், சாலப்பேசினுன், மற்ருென்று, காக்கை பறந்தது, கண்டேன் அவனை, தங்காய் வா, கண்டு சென்ருன், தீத்தீத்தீ.

14. பின்கண்டவை எவ்விதிப்படி புணர்ந்தன எனக் கூறுக,

(1) அஞ்செவி	(6) கட்புலன்
(2) பூஞ்செடி	(7) எட்செடி
(3) பணப்பெட்டி	(8) ஓடிப்போனுன்
(4) இடந்தந்தான்	(9) வந்த சிறுவன்
(5) மணற்குன்று	(10) வந்துசென்ருன்

15. தற்குறிப்பேற்றவணி, உயர்வுநவிற்சியணி, முரண் தொடையணி இவற்றுக்கு முறையே ஒவ்வொரு உதாரணம் தருக.

16. பின்கண்டவை எவ்வணிகள் எனக் காரணத்தோடு கூறுக.

(1) அந்த ஏழையின் ஓட்டைக் குடிசையில் நிலாவொளி வீசியதானது அந்த ஏழையின்மீது கருணை கூர்ந்து சந்திரன் விளக்காக அமைந்தது போன்றிருந்தது.

(2) அந்நகரத்து மதில்கள் சூரியமண்டலத்திற்கு மேலும் உயர்ந்திருந்தன.

(3) இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

17. இடைப் பிற வைப்புக் குறிகள் பொருந்தி வருமாறு இரண்டு வாக்கியங்கள் கூறுக.

18. பிறைக் குறிகள் எவ்வெவ் விடங்களில் வரும்? உதாரணங்கள் கூறுக.